# நெய்தல்

கிழக்குப் பல்கலைக்கழகம் கலை பண்பாட்டுப் பீடத்தின்
அரையாண்டுச் சஞ்சிகை
தொகுதி 2 எண் ii

7/1/3

# நெய்தல்

தொகுதி 2 எண் ii

கலை, பண்பாட்டுப் பீட வெளியீடு.

கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
செங்கலடி,
இலங்கை.

**NEITHAL**

A bi - annual research journal of the Faculty of Arts & Culture, Eastern University Sri Lanka Vol.2, No. ii

| | | |
|---|---|---|
| Editior | :- | **S. Yogarajah** |
| Managing Editior | :- | **J. M. Kennedy Vijiaratnam** |
| Editorial Board | :- | **S. Maunaguru**<br>**M/s S. Ponniah**<br>**M. Selvarajah** |
| Cover Design | :- | **Arunthathy Sabanathan** |
| Copy Right | :- | Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka, 2001 |
| Printers | :- | **New Keen Printers, Batticaloa.** |
| Price | :- | **50/-** |

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | :- | **செ. யோகராசா** |
| நிர்வாக ஆசிரியர் | :- | **ஜோ. ம. கென்னடி விஜயரத்தினம்** |
| ஆசிரியர் குழு | :- | **சி. மௌனகுரு**<br>**செல்வி. எஸ். பொன்னையா**<br>**ம. செல்வராசா** |


**நெய்தல்** :- இழைத்தல், இணைத்தல் > ஆக்கம்

வருடம் இருமுறை வெளியிடப்படும். இதில் தமது ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரிக்கவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-


**செ. யோகராசா**
கிழக்குப்பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை,
செங்கலடி.


***நிர்வாக விடயங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :-***


**ஜோ. ம. கென்னடி விஜயரத்தினம்**
விரிவுரையாளர், மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.
செங்கலடி.

# பதிப்புரை

நெய்தல் இரண்டாவது தொகுதியின் இரண்டாவது இதழை வெளியிடுவதில் நெய்தல் ஆசிரியர்குழு மகிழ்ச்சியடைகின்றது. இவ்விதழ் சென்ற வருட முற்பகுதியில் கலை பண்பாட்டுப்பீடம் நடத்திய முதலாவது ஆய்வரங்கிலே வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக மலர்ந்துள்ளது.

நவீன காலப் புலமைத்துவ வளர்ச்சியில் உயர்கல்வி நிறுவனமாகிய பல்கலைக்கழகத்தினதும் பல்கலைக்கழக ஆசிரியர்களினதும் பங்களிப்பு அளப்பரியது; முக்கியமானது. இப்பின்னணியில் பல்கலைக்கழக ஆய்வுச் சஞ்சிகைகளின் வரவு கவனத்திற்குரியதாகின்றது. ஏனெனில் அவை பல்கலைக்கழகத்தினதும் பல்கலைக்கழக ஆசிரியர்களினதும் இருப்பை வெளிப்படுத்தும் முக்கிய சாதனங்களாகின்றன.

மேற்கூறிய பின்னணியில் நெய்தல் சஞ்சிகை வரவின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழக ஆசிரியர்கள் பிரக்ஞை பூர்வமாகப் புரிந்துகொண்டு வருங்காலத்தில் தங்கள் ஒத்துழைப்பினை பல்வேறு விதங்களிலும் வழங்குவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

- ஆசிரியர்

உள்ளே . . . பக்கம்

இலங்கையின் 1978ஆம் ஆண்டின் யாப்பின்கீழ் ஜனாதிபதியின் தத்துவங்களும் 1999ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் - ஓர்ஆய்வு 01

**– வேலுப்பிள்ளை குணரத்தினம் –**

Education in the conflict areas in Sri Lanka 16

**– M. Selvarajah –**

ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக்குரல்கள் 34

**– செ. யோகராசா –**

Challenges and importance of indentifying and establishing a tradition for writing in English by the Thamils of Sri Lanka. 47

**– S. Jeyasankar –**

மட்டக்களப்பு மாவட்ட கல்விவாய்ப்புக்களுக்கும் பாடசாலை இடஅமைவுகளின் பரம்பலுக்கும் இடையிலான தொடர்பு 53

**- மரகதலிங்கம் வர்ணகுலசிங்கம் -**

## கட்டுரையாளர்கள்

**திரு. வேலுப்பிள்ளை குணரத்தினம்,** பீ.ஏ. (சிறப்பு) எம்.பில்., தலைவர், சமூக விஞ்ஞானத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. ம. செல்வராசா** எம்.பில் (கொழும்பு) எம்.எட். (UK), பி.ஜி.டி.எ.எம் (இலங்கை), முதுநிலை விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி செ. யோகராசா**, பீ.ஏ. (விசேடம்) பி.பில், எம்.ஏ. பி.எச்.டி. முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. மரகதலிங்கம் வர்ணகுலசிங்கம்** பீ.ஏ. (சிறப்பு) எம்.ஏ., டிப்.இன்.எட், விரிவுரையாளர், புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. சி. ஜெயசங்கர்,** பீ.ஏ. (சிறப்பு), விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# “இலங்கையின் 1978ஆம் ஆண்டின் யாப்பின்கீழ் ஜனாதிபதியின் தத்துவங்களும், 1999ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும்”

## – ஓர் ஆய்வு –

– வேலுப்பிள்ளை குணரத்தினம் –

## அறிமுகம்

அரசாங்கத்தின் அலகுகளில் ஒன்றான ஆட்சித்துறைக்கு தலைமைத்துவம் (Leadership) அமைந்திருத்தல் மிக அவசியமாகும். ஆரம்ப காலத்தில் இத்தலைமைத்துவம் வரலாற்று நிகழ்வுகளினால் தோன்றியது. அதாவது, வலிமை, திறமை (Strength and ability) இவையே அதன் ஆரம்ப அடிப்படையாகும். நாட்டை அல்லது சமூகத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஆற்றல் கொண்டவர்களே தலைமைத்துவத்தை கொண்டிருந்தனர். சமூகம் தம்மை விரிவாக்கிக் கொண்டதை அடுத்து தலைமைத்துவமும் வளர்ந்து ஆட்சிப்பீடம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. முறைசார்ந்த விதத்தில் நெறிப்படுத்தப்பட்ட ஆட்சித்துறைத்தலைமை அரசாங்கத்திற்கு உயிரோட்டத்தை அளித்தது.

மேற்கூறிய பின்னணியில் இலங்கையை அவதானிக்கின்றபோது சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து மந்திரிசபை ஆட்சி தலைமைத்துவ முறையே இருந்து வந்தது. ஆனால், 1978 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் அம்முறையை மாற்றிவிட்டு நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதித்துவ ஆட்சித்தலைமைத்துவ முறையை கொண்டு வந்தனர். 1972ஆம் ஆண்டு யாப்பில் பல மாற்றங்களைக் கொண்டு வந்து 1978ஆம் ஆண்டு “இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு” என்று யாப்பை மாற்றியதன் மூலம் சுதந்திரகாலந் தொட்டு நாட்டில் நிலவி வந்த வெஸ்ட்மினிஸ்டர் முறையில் மாற்றம் ஏற்பட்டது. புதிதாக கொண்டு வரப்பட்ட இந்த யாப்பின் மூலம் நாட்டின் நிர்வாகத்துறைக்கு பொறுப்பாக்கப்பட்ட ஜனாதிபதி சகல துறைக்கும் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கும் சக்தி யுள்ளவராகக் காணப்படுகின்றார்.

## பின்னணி

பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான மந்திரிசபை ஆட்சி முறையினை இலங்கையின் சமூக பொருளாதார விடயங்களுக்குப் பொருத்த மற்றது என்றும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு பலம் வாய்ந்த நிர்வாக முறையொன்று அவசியம் என்றும் கூறப்பட்டது. உறுதியான அரசாங்கமும், நிர்வாகமும் இலங்கை, எதிர்நோக்கும் பல அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வாக

அமையும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிர்வாகத்துறை சட்டத்துறையில் இருந்து தெரிவு செய்யப்படும். அதேவேளை சட்டத்துறையில் பெரும்பான்மையில் தங்கியும் காணப்படுகிறது. அதன்படி நாம் பிரித்தானிய யாப்பினை பின்பற்றுகின்றோம். பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருக்கும் நிர்வாகத்துறை உறுதி வாய்ந்ததாகவும் அவை சட்டத்துறையின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்படாமலும் செயற்படுகின்றது. எம்மைப்போன்ற பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கு இதுபோன்ற முறையே அவசியமானது எனக் கருதுகின்றேன்'' எனக்குறிப்பிட்டார். 1970ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அரசியல் திட்ட அசெம்பிளியில் 1971 ஜூலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரேரித்த பிரேரணையில் இத்தகைய கருத்துக் காணப்பட்டது. 1975ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி வருடாந்த மகாநாட்டில் உறுதியான நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான அரசியற்திட்டத் திருத்தப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு கட்சியின் பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதேவேளை, 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது சேர்க்கப்பட்டு மக்களிடம் அனுமதி கோரப்பட்டது. இவ்வகையில், 1977ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களைப்பெற்று பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி 1978ஆம் ஆண்டு பெப்ரவரியில் இரண்டாம் குடியரசு யாப்பை அறிமுகப்படுத்தியதுடன், அதன் முக்கிய வெளிப்பாடாகிய தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும் அறிமுகப்படுத்தியது.

ஜனாதிபதி முறை புகுத்தப்பட்டமைக்கு, பின்வரும் காரணங்கள் கூறப்பட்டன. அவையாவன :

1. ஜனாதிபதி அங்கீகரிக்கப்பட்ட தலைவராகக் காணப்படுவதனால் குழப்பம் பிரச்சினைகள் ஏற்படும் காலப்பகுதியில் அவைகளை தீர்த்துவைப்பதில் மிகவும் அதிகமான அதிகாரங்களைக் கொண்டு செயற்படக்கூடியவராக இருப்பார்.

2. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப் பகுதியில் அமைக்கப்பட்ட அரசாங்கங்கள் ஏதோ ஒரு வகையில் ஸ்திரமற்ற நிலையில் காணப்பட்டன. அது இலங்கையின் அபிவிருத்திக்கு தடையாக அமைந்தது.

3. இலங்கை மக்களின் பெரும் பான்மையினரால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதினால் வேண்டிய சமயங்களில் கட்சி முரண்பாடுகளுக்கு அப்பால் நின்று கடமையாற்ற முடியும். ஏனெனில், பல இனமக்கள் வாழும் நாட்டில் ஒரு குழுவினரிடமிருந்து மட்டு மல்லாது பரந்தரீதியாகவும் ஆதரவைப் பெற்று தெரிவு செய்யப்பட்டிருப்பார்.

4. ஜனாதிபதி கூடிய அதிகாரத் தையும் அந்தஸ்தையும் பெறு வதனால் அரசாங்கக் கொள்கை களை உருவாக்குவதும் நடை முறைப்படுத்துவதும் அவருக்குச் சாத்தியமானதாகும்.

## ஜனாதிபதி தெரிவு

உறுப்புரை 30, ஆறு ஆண்டு காலம் பதவி வகுப்பதற்கென ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று குறிப்பிடுகின்றது. 30 வயதை அடைந்த 38(2) இன் கீழ் பதவியகற்றப்படாத பிரிவு 89, 91 இன் கீழ் குற்றத்தண்டனை பெறாத ஒருவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க தகுதியுடைய நபராவார். இரு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிப்பதை இப்பிரிவு தடுக்கின்றது. ஜனாதிபதி தேர்தல் பற்றிய ஏற்பாடுகளை உறுப்புரை 94 தெளிவாக்குகின்றது. இத்தேர்தல் இடம்பெறுகின்றபோது, இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்படும். இரு வேட்பாளர்கள் மட்டும் தேர்தலில் போட்டியிடுவார்களாயின் வாக்காளர் ஒரு வாக்கை மட்டும் பிரயோகிக்கலாம். வேட்பாளர் மூவராயின் ஒருவருக்கு வாக்களித்து மற்றொருவருக்கு விருப்புரிமை வாக்களிக்கலாம். வேட்பாளர் மூவருக்கு மேற்பட்டால் ஒருவருக்கு வாக்களித்து இரண்டாம் மூன்றாம் விருப்புரிமையும் வழங்கலாம். அளிக்கப்பட்ட தகுதியான வாக்குகளில் 50 சதவீதத்திற்கு மேல் பெறப்பட்டால் அவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவராக கருதப்படுவார். இவ்விகித அளவை ஒருவரும் பெறாதவிடத்து கூடியளவு வாக்குகளைப் பெற்ற முதலிரு வேட்பாளர்கள் தவிர்ந்த மற்றைய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு வாக்காளர் பெற்ற வாக்குகளில் முதலிருவருக்கும் விருப்புரிமை வாக்கு அளிக்கப்பட்டிருந்தால் அது அவர் பெற்ற வாக்காக கணிக்கப்பட்டு கூடியளவு வாக்குகளைப் பெற்றவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார். இதுவரை இலங்கையில் நடந்த ஜனாதிபதி தேர்தல்களில் விருப்புரிமை வாக்கு கணிக்கப்படாமலேயே ஜனாதிபதிகள் தேர்தெடுக்கப்பட்டார்கள்.

அரசியலமைப்பில் மூன்றாவது யாப்புச்சீர்திருத்தம் ஜனாதிபதி தேர்வில் மேலும் சில விடயங்களை இணைத்துக்கொண்டது. அதாவது, உறுப்புரை 31(3) ஐ உடன் அடுத்து 3A என்ற பந்தி சேர்க்கப்பட்டதன் மூலம் ஜனாதிபதி தொடர்பில் புதிய ஏற்பாடுகள்

புகுத்தப்பட்டுள்ளன. அவையாவன;

1. முதல்முறை ஜனாதிபதி பதவிக்குத் தேர்தெடுக்கப்பட்ட ஒருவர் தமது பதவிக்காலத்தில் 4 ஆண்டுகளை நிறைவு செய்த பின் மீண்டும் ஒரு முறை பதவி வகிப்பதற்கான தேர்தல் ஒன்றை நடத்துமாறு தேர்தல் ஆணையாளரைக் கோரலாம்.

2. இத்தேர்தல் நடைபெறுமுன் ஜனாதிபதி இறந்தால் எஞ்சிய காலப்பகுதி உறுப்புரை 40இல் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும். அதாவது, இறப்பை உடனடுத்து பிரதமமந்திரி அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம். பிரதமமந்திரி ஏற்றுக் கொள்ளாதவிடத்து சபாநாயகர் ஏற்றுக் கொள்ளலாம். பின்னர் ஒரு மாத காலத்திற்குள் பாராளுமன்றத்தில் பொருத்தமான ஒருவரை தெரிவு செய்து எஞ்சிய காலப்பகுதி முழுவதும் பதவியில் இருக்கலாம்.

3. தேர்தல் முடிவுற்று வாக்குகள் எண்ணி முடிவுகள் வெளியிடப்படுமுன் ஜனாதிபதி வேட்பாளர் இறந்தால் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டு இறந்தவரே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும்.

4. இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி பதவி ஏற்பதற்கு முன் இறந்தால் புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நான்கு ஆண்டுகளை நிறைவு செய்த ஜனாதிபதி மீண்டும் ஒரு முறை பதவி வகிப்பதற்கு தேர்தலில் நிற்கும் இந்த ஏற்பாடு துாய ஜனநாயக முறைக்கான ஒரு சவாலாக கொள்ளப்படுகின்றது. சாதகமான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி தேர்தலை தம் வெற்றிக்குரியதாக்கும் தந்திரோபாயம் என இதைக் கொள்ள முடியும்.

## ஜனாதிபதியின் அதிகாரங்கள்

ஜனாதிபதி சட்ட, நிறைவேற்று நீதித்துறை சார்ந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

## நிறைவேற்று அதிகாரங்கள்

இரண்டாம் குடியரசு யாப்பில் பின்வரும் ஏற்பாடுகள் மூலம் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. உறுப்புரை 33 இன்படி இந்தயாப்பினாலும் பிற நியதிச் சட்டங்களாலும் அளிக்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதி பிரயோகிக் கலாம். இந்த ஏற்பாடு தன்மதியுடன் செயற்பட ஜனாதிபதிக்குத் தத்துவத்தைக் கொடுக்கின்றது. இது, முதலாம் குடியரசு ஜனாதிபதியையும் இரண்டாம் குடியரசு ஜனாதிபதியையும் வேறுபடுத்தும் வாசகமாகவும் உள்ளது. உறுப்புரை 33 இன்படி பாராளுமன்றத்தின் ஒவ்வோர் கூட்டத்தொடர் ஆரம்பத்திலும் அரசாங்க கொள்கைக் கூற்றை (Statement of Government Policy) வெளியிடவும் மரபுவழி இருக்கைகளுக்கு (Ceremonial Siting) தலைமை தாங்கவும் முடியும். ஜனாதிபதி பிரகடனத்தின் (Proclamation) மூலம் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம், ஆயினும் இத்தத்துவம் பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

1. பொதுத்தேர்தலின் பின் முதலாவது பாராளுமன்றக் கூட்டத்தொடர் கூட்டப்பட்டு ஒரு வருடம் முடிவடைவதற்கு முன் கலைக்க முடியாது, இருந்தும் இக்காலப் பகுதிக்குள் பாராளுமன்றம் தம்மைக் கலைத்துவிடுமாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் கலைக்கலாம்.

2. உறுப்புரை 38(2) இன்கீழ் குற்றப்பிரேரணை (Impeachment Petition) பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் சேர்க்கப்பட்டிருந்தால் கலைக்கமுடியாது. ஆயினும் 2/3 பெரும் பான்மையினால் அக் குற்றப்பிரேரணையை நிறைவேற்றத் தவறினால், உச்ச நீதிமன்றம் குற்றப்பகர்வு நிறுவப்பட வில்லை எனத்தீர்ப்பளித்தால் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.

3. பாராளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தில் (Proclamation) மூன்று மாதத்திற்குப் பிந்தாது புதிய பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாளும் குறித்துக் காட்டப்படல் வேண்டும்.

4. பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக் கின்ற நேரத்தில் ஜனாதிபதி அவசரகால நிலைப்பிரகடனத்தைச் செய்தால் அதை ஏற்று அங்கீகரிக்கும் நோக்கத்திற்காக மூன்று நாள் அறிவித்தலுடன் பாராளு மன்றத்தைக் கூட்டலாம். இந்த ஏற்பாடுகளின் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் மீது தமது தீவிரமான கட்டுப்பாடுகளை செலுத்த முடிகின்றது. தமக்கு விருப்பம் இல்லாத சட்டங்களை நிறைவேற்றுவதில் இருந்தும் பாராளு மன்றத்தை தடுக்க முடிகின்றது. இதன் அடிப்படையில் நாட்டை தமது நெறிப்படுத்தலுக்கு அப்பால் பாராளுமன்றம் சென்றுவிடாது தடுக்கத்தக்கதாக

உள்ளது. ஜனாதிபதி எதிர் பாராளுமன்றம் அமையும் போது ஜனாதிபதிக்குள்ள பாராளுமன்றத்தை கலைக்கும் தத்துவம் மிகப்பெரும் சக்தியாக செயற்படத் தக்கதாக உள்ளது. இந்த ஏற்பாட்டால் பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையே தொடர்ச்சியான மோதல் ஏற்படும். அதுமட்டுமன்றி, ஆரோக்கிய ஜனநாயக அரசியல் கட்டமைப்பையும் இது தகர்க்கவும் கூடும்.

## பாராளுமன்றத்தால் ஜனாதிபதி மீது செய்யத்தக்க கட்டுப்பாடுகள்

பாராளுமன்றம் ஜனாதிபதியை கட்டுப்படுத்தத்தக்க ஏற்பாடுகள் இப்பிரிவில் தரப்பட்டுள்ளன. ஜனாதிபதி நிறைவேற்றுத்தத்துவத்தை முறையின்றி பிரயோகிக்கும்போது பாராளுமன்றம் ஜனாதிபதியை பதவியகற்றலாம். மன உடல் நிலையால் நிரந்தரமாக செயலாற்ற முடியாது விட்டால், யாப்பு ஏற்பாடுகளை மீறியுள்ளார், கையூட்டல், அதிகாரப்பிறழ்வு, சட்டத்தால் தவிர்க்கப்பட்ட ஒழுக்கக் குறைபாடுடையவர் ஆகிய காரணங்களினால் பாராளுமன்ற உறுப்பினர் எவராவது சபாநாயகருக்கு முகவரியிட்டு உச்சநீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தக் கோரலாம். மொத்தப்பாராளுமன்ற உறுப்பினர்களுள் 50% த்தினர் மட்டும் கைச்சாத்திட்டிருந்தால் சபாநாயகர் நிகழ்ச்சித்தாளில் இப்பிரேரணையை (Impeachment procedure) சேர்க்கலாமா என்பதை தன் மதியுடன் தீர்மானிப்பார். 2/3 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தால் சபாநாயகர் மறுப்பின்றி நிகழ்ச்சித்தாளில் சேர்த்தல் வேண்டும். இப்பிரேரணையை பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றினால் சபாநாயகர் உச்ச நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தி அதன் அறிக்கையைக் கோரவேண்டும். உச்ச நீதிமன்றத்தில் குறித்த குற்றப்பிரேரணை விசாரிக்கும் போது ஜனாதிபதி தானாகவோ, தனது வழக்கறிஞர் மூலமாகவோ எதிர் வாதத்தினை முன்வைக்கலாம்.

உச்சநீதிமன்றம் ஜனாதிபதி மீது சாட்டப்பட்ட குற்றம் நிருபிக்கப் படவில்லை எனத் தீர்ப்பளித்தால் இப்பிரேரணை செயலற்றுவிடும். குற்றம் நிருபிக்கப்பட்டால் அது பாராளுமன்றத்தில் மீண்டும் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். இந்நிலையில் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும். இம்முறையை பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் மூன்றடுக்கு நடைமுறை (Three tire procedure) எனக் குறிப்பிடுகின்றார். இதன் சட்டப் பெறுமானத்தை நோக்கினால்,

1. முழுப்பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே முகமாக வாக்களிப்பதன் மூலமும் ஜனாதிபதியை பதவியகற்ற முடியாது.

2. நீதிமன்றம் குற்றப்பகர்வு நிருபிக்கப்பட்டுள்ளது என தமது அறிக்கையை கையளித்தாலன்றி பாராளுமன்றம் ஜனாதிபதியை பதவியகற்ற முடியாது.

3. பாராளுமன்றம் எதிர் ஜனாதிபதியாக அமையும் போது இவ்வாறான பழிமாட்டறைவுக்கு சந்தர்ப்பம் எழலாம். ஆயினும் இன்றுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை 2/3 பெரும்பான்மையை தனியான கட்சிக்கு அளிக்குமா என்பது சந்தேகமே.

4. சபாநாயகரின் முடிவும் பலம் வாய்ந்ததாக உள்ளது. 2/3 பகுதியினர் கையொப்பமிடாத பழிமாட்டறைவினை சபாநாயகர் நிராகரித்துவிடலாம். காலம் சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான பழிமாட்டறைவு இந்த விதத்திலேயே செயலிழக்கச் செய்யப்

பட்டது. இம்முறை அமெரிக்க பழிமாட்டறைவு முறையை தழுவியதாக உள்ளது. ஆயினும் அமெரிக்காவில் நீதிமன்றம் இதில் நியாயாதிக்கம் கொண்டிருக்கவில்லை. காங்கிரஸ் தம்மை நீதிதீர்ப்புக்கான பேரோளர்சபை (Grant Jury) ஆக மாற்றி ஜனாதிபதிக்கு எதிரான பழிமாட்டறைவை விசாரித்து அறிக்கை செய்கின்றது. செனட்சபையில் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றுவதன் மூலமே ஜனாதிபதி பதவி வறிதாக்கப்படும்.

## அமைச்சரவையில் ஜனாதிபதிக்குள்ள தத்துவங்கள்.

ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவராவார். இவர் பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து பிரதம அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகியோரை நியமிப்பார். அமைச்சரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஜனாதிபதியே தீர்மானிப்பார். எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஜனாதிபதி தமக்காக ஒதுக்கிக்கொள்ளலாம். மேலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் போது புதிய பாராளுமன்றம் கூட்டப்படும் வரை ஜனாதிபதியே அமைச்சரவையாக செயலாற்றுவார். அத்தோடு அமைச்சர்கள் விலகிக்கொண்டால் அல்லது இறந்தால் அந்த அமைச்சுப்பொறுப்பை தனதாக்கிக் கொள்ளலாம். அல்லது புதியவரை நியமித்துக் கொள்ளலாம். ஆயினும் அமைச்சரவை ஜனாதிபதி மீது சில மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதாவது, பாராளுமன்றம் அமைச்சரவையின் அரசாங்கக் கொள்கைக் கூற்றை நிராகரித்தல், நிதி ஒதுக்கீடுகள் சட்டமூலத்தை (Appropriation Bill) நிராகரித்தல், பாராளுமன்றம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை (Non Confidence) நிறைவேற்றினால் அமைச்சரவையை கலைத்தல் ஆகிய அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

## ஜனாதிபதியின் சட்டவாக்கத் தத்துவங்கள்.

உறுப்புரை 85,86 களின் கீழ் ஜனாதிபதி சட்டவாக்கத்தத்துவங்களை பிரயோகிக்க முடிகின்றது. அவையாவன;

1. அமைச்சரவையால் மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிப்பதற்கு முன்வைக்கப் படும் சட்ட மூலங்கள்.

2. உயர்நீதிமன்றம் தமது யாப்பில் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும் போது மக்கள் தீர்ப்பு பெறப்படவேண்டும் என கருத்துக்கொள்ளும் சட்டமூலங்களையும் ஜனாதிபதி கட்டாயமாக மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு நிராகரிக்கப்பட்ட யாப்புச்சீர்திருத்தம் தவிர்ந்த ஏனைய சட்டமூலங்களை ஜனாதிபதி மக்கள் தீர்ப்புக்காக சமர்ப்பிக்கலாம்.

4. யாப்பியல் ஏற்பாடுகள் தவிர்ந்த தேசிய நலனுக்கு அவசியமெனக்கருதும் எச்சட்டமூலங்களையும் ஜனாதிபதி தமது சொந்த விருப்பின் பேரில் மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிப்பதன் மூலம் சட்டமாக்கலாம்.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் மூலம் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.

1. பாராளுமன்றத்தால் மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பிக்க வேண்டுமென உறுதிப்படுத்தப் பட்ட சட்டமூலங்களை ஜனாதிபதி சமர்ப்பிக்க மறுத்தால் பாராளுமன்றம் தனிவழி நின்று சட்டமாக்கும் ஏற்பாடுகள்யாப்பில் இல்லை. இந் நிலையில் பாராளுமன்றம், ஜனாதிபதி என்ற நிலைதோன்றி அரசியல் அனர்த்தங்களைத் தோற்றுவிக்கலாம்.

2. தேசிய நலன் வாய்ந்த விடயங்களை பாராளுமன்ற வழிமுறையின்றியே மக்கள் தீர்ப்பின் மூலம் சட்டமாக்கும் தத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளமை பாராளுமன்றத்தின் சட்டமாக்கத் தத்துவத்தின் மீயுயர் அதிகாரத்தை (Supremacy of Parliament) தகர்த்துள்ளது. அத்துடன் நிறைவேற்றுத் துறையான ஜனாதிபதி சட்டவாக்கத் துறையின் பணியைப்புரிவதால் வலு வேறாக்கக் கோட்பாட்டை செயலி ழக்கச் செய்துள்ளது எனலாம்.

3. மக்கள் தீர்ப்பின் மூலம் ஜனாதிபதி தாமே கைச்சாத்திட்டு நிறைவேற்றுகின்ற சட்டங்களை பாராளுமன்றம் உறுப்புரை 75 இன்கீழ் இல்லாதொழித்தல் மூலம் (Repel) பாராளுமன்றமும் ஜனாதிபதியும் அரசியல் மோதலுக்கு முகம் கொடுக்கலாம்.

யாப்பின் உறுப்புரை 155 இன்படி பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் (Public Security Ordinance) சட்டவலுப்படுத்தப் பட்டுள்ளது. இதன்கீழ் ஜனாதிபதி அவசரகாலப் பிரகடனத்தை செய்வதன் மூலம் ஒழுங்குவிதிகளை (Regulation) ஆக்கலாம். அத்துடன் யாப்பு தவிர்ந்த சட்ட ஏற்பாடுகளையோ, சட்டங்களையோ செயலில் இருந்து நிறுத்திவைக்கலாம். இதற்குப்பதிலீடாக புதிய சட்ட விதிகளை செயற்படுத்தலாம். நடைமுறையிலுள்ள எந்த நிறுவனங்களையும் செயலிழக்கச் செய்யலாம். புதிய நிறுவனங்களைத் தோற்றுவிக்கலாம். மேற்குறிப்பிட்ட ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பாக பின்வரும் விடயங்களை அவதானிக்கலாம்.

1. பதட்டநிலை உண்மையில் தோன்றியுள்ளதா என எந்தநீதிமன்றத்தி லும் கேள்விக்கு உட்படுத்த முடியாது.

2. இப்பிரகடனத்தை வெளியிட்டதும் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்துடன் சட்டவாக்க அதிகாரத்தையும் பெற்று விடுகின்றார்.

3. ஜனாதிபதியின் அவசரகாலச் செயல்முறைகளை பத்து நாட்களுக்குள் பாராளுமன்றம் ஏற்று அனுமதிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டால் இவ்வதிகாரத்தின் தாக்கம் குறைத்து மதிப்பிடப்படுகின்ற போதும் நவீன அரசியல் ஆய்வாளர்கள் ஒரு சர்வாதிகாரி ஆட்சி அதிகார அலகுகள் அனைத்தையும் கைப்பற்றுவதற்கு பத்து நாட்கள் அவசியமா என வினா எழுப்புகின்றனர்.

## ஜனாதிபதியின் நீதித்துறைத் தத்துவங்கள்

உறுப்புரை 107 இன்படி ஜனாதிபதி பிரதமநீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கலாம். அவசியத் தேவையின் நிமித்தம் பதில் நியமனங்களைச் செய்யலாம். உறுப்புரை 112 இன்படி நீதிச்சேவை ஆணைக் குழுவினது தலைவரையும் உறுப்பினர் களையும் நியமிக்கலாம். உறுப்புரை 110 இன்கீழ் ஒதுக்கப்பட்ட பணிகளைப்புரிய (appropriate duties) ஜனாதிபதி உச்சநீதிமன்றத்தைப் பணிக்கலாம். அதுமட்டுமின்றி, நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கவும், தண்டனையை ஒத்திவைக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

## 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்

பொதுஜனஐக்கிய முன்னணியின் சார்பில் 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் போட்டியிட்டார்கள். 1994ஆம் ஆண்டு நவம்பர் 10ம் திகதி இடம்பெற்ற இத்தேர்தலில் 47,09205 வாக்குகளைப் பெற்று அதாவது, 62.28 சதவீதமான வாக்குகளைப் பெற்று நாட்டின்

ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 30(2)வது சரத்தின் பிரகாரம் நவம்பர் 2000ம் ஆண்டுவரை அதாவது, 6 வருடங்களுக்கு ஜனாதிபதியாக பதவிவகிக்கும் ஆணை வழங்கப்பட்டது. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின் 31(3A)வது சரத்தின் அதிகாரத்தினை பிரயோகித்து ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் பிரகடனத்தினைப் பிறப்பித்தார். இதன் பிரகாரம் 1999ஆம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஓராண்டு காலம் இருக்கும் போதே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு உத்தரவினை பிறப்பித்தமைக்குப் பல காரணங்கள் ஏதுக்களாக அமைந்து இருந்தன. தேர்தலை முன்பு நடத்துவதற்காக கூறப்பட்ட பிரதான காரணம் 2/3 பெரும்பான்மை வாக்குப் பலத்தைப் பெற்று அரசியலமைப்பைத் திருத்துவதற்கு அங்கீகாரத்தைப் பெறுவதும், அதன் வழி நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது மேயாகும் என்றார். எனவே, 2/3 பெரும்பான்மையினைப் பெறுவதற் காகவே தேர்தல் முன்கூட்டி நடத்தப்பட்டது என்ற கூற்றையும் புறந்தள்ள முடியாது.

தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் இவ்வாறு காரணங்களைக் கூறிய பொழுதிலும், அவரது உள்நோக்கம் வேறொன்றாகவே இருந்தது. அதாவது, மீண்டும் ஜனாதிபதியாக தான் வரவேண்டும் என்பதும், அதன்பின் ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு பாராளுமன்றத் தேர்தலை நடத்தாமலே அதனை நீடிப்பதற்கு ஒரு கருத்துக்கணிப்பீட்டு தேர்தலை நடத்தி மீண்டும் ஒருதடவை 6வருடங்களுக்கு ஜனாதிபதியாக இருப்பதும் ஒரு காரணமாகும். எனவே, தனது அரசியல் இருக்கையினைத் தொடர்ந்து நீடித்து வைத்துக் கொள்வது தான் முக்கியமான உள்நோக்கமாக காணப்பட்டது.

தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கான காரணங்களில் வன்னிப் பெருநிலப் பரப்பினை ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலமாகக் கைப்பற்றிவிட்ட பெருமிதத்துடன் அதை தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் இறங்கினார். அத்துடன், 1999ம் ஆண்டு இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சி பெற்ற வெற்றியும் தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்குப் பின்னணியாகவும் அமைந்து இருந்தன. அதேநேரம் இக்காரணங்களை தமக்குச் சார்பாக எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சியும் தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கு ஒத்தாசை வழங்கியது. ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக போட்டியிட்டார். இவர் 1999ம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சி தோல்வியடைந்த போதும், சொற்பளவிலான வாக்கு வித்தியாசத்தில் தான் தோல்வி கண்டது என்றார். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அத்துடன், வன்னியில் அரசாங்கம் கைப்பற்றிய பிரதேசத்தினை விடுதலைப்புலிகள் கைப்பற்றியமையும், அனேக பாதுகாப்புப் படைகளின் அழிவுகளும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பினை வெளிக்காட்டியது. இக்காரணங்களால் ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெறும் என்ற நோக்கில் தேர்தலில் போட்டியிட்டது.

தேர்தல் முன்கூட்டி இடம்பெறுவதை தமிழ்க் கட்சிகளும், இடதுசாரிக்

கட்சிகளும் விருப்பம் கொண்டிருக்க வில்லை. உண்மையில் 2/3 பெரும்பான்மை பாராளுமன்றத்தில்தான் தேவை, எனவே அதற்கு ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டிய அவசியமில்லை. இருந்தபோதும் ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி 1999ஆம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலில் கட்சிசார்பாக 10 அபேட்சகர்களும், 03 சுயேட்சை அபேட்சகர்களுமாக மொத்தமாக 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மேற்கொண்ட பிரச்சார விடயங்களும் முக்கியம் பெறுகின்றன. இத்தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு), ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க), நந்தனகுலதிலக (ஜே.வி.பி), ஹரிச்சந்திர விஜேதுங்க (பூமி.பு.க) டபிள்யூ.வி.எம்.ரஞ்சித் (சுயேட்சை), இராஜீவ விஜேசிங்க (லிபரல் கட்சி), வாசுதேவ நாணயக்கார (இடதுசாரி ஐ.மு), டெனிஷன் எதிரிசூரிய (சுயேட்சை), அப்துல் ரசூல் (மு.கா), கமல்கருணாதாச (ம.இ.மு), ஹட்ஸன் சமரசிங்க (சுயேட்சை), ஆரியவன்ஸ திஸநாயக்க (ஐ.ஐ.தே.மு), அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்த்தன (பொ.வி.மு) ஆகிய வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களும், ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றும் இரு பிரதான வேட்பாளர்களாகக் காணப்பட, ஏனையோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்கள் ஆட்சியதிகாரத்தினைக் கைப்பற்றுமளவிற்கு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுக்காணப்படவில்லை.

1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார விடயங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக போட்டியிட்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் பிரச்சார விடயம் பற்றி அவதானிக்கையில், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் தேர்தல் விஞ்ஞாபனமாக 'யுத்தம் பற்றி ஒரு வார்த்தை' எனும் அறிக்கை அமைச்சர் மங்கள சமரவீர என்பவரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்வறிக்கையில் 1994ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட விடயங்கள் தான் மீண்டும் முன்வைக்கப்பட்டன. இவற்றில் இனப்பிரச்சினை தொடர்பாகவும் கூறப்பட்டிருந்தது. 'இலங்கையில் இனப்பிரச்சினை உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டு, அவற்றுக்கு நிரந்தர நீண்ட காலத்தீர்வை ஏற்படுத்தக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் எனவும், நாட்டின் பூகோள, சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப புதிய நிர்வாக அலகு உருவாக்கவும் அவற்றிற்காக விடுதலைப் புலிகள் உட்பட, தீர்வின் அவசியம் பற்றி உணரும் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும்' எனவும் சுட்டிக்காட்டப்பட்டன. அத்துடன், பிரச்சார விடயத்தில் தனது அரசாங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகளையும், சாதனைகளையும் வெளியிட்டும் பிரச்சாரம் செய்தும் வந்தார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமாக 'மக்களுடன் எனது உடன்பாடு' ரணில் விக்கிரமசிங்கா அவர்களினால் விநியோகிக்கப்பட்டது. இவ்வறிக்கையின் பிரதான அம்சங்களாக "இளைஞர்களுக்கு நம்பிக்கையினை அளித்தல், நாட்டில் போரினை முடிவிற்குக் கொண்டு வருதல், சமாதானத்தை ஏற்படுத்துதல், பல்லினத்தன்மையை உருவாக்குதல், நாட்டின் தேசிய கிராமிய பொருளாதாரத்தை ஊக்குவித்து நவீனமயப்படுத்துதல், வேலைவாய்ப் பின்மையினை நீக்குதல், நாட்டில் ஒழுக்கம், நல்லெண்ணம், சமூகப்பாதுகாப்பு என்பவற்றை மேற்கொள்ளல்" என்பன காணப்பட்டன. இவ்வறிக்கையில் நாட்டின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் கூறப்பட்டிருந்தது. 'வடகிழக்கில் உள்ள

சகலமக்களும் இனவேறுபாடின்றி நியாயமான முறையில் இனப்பிரச்சினையை நான் தீர்ப்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன் என்பதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தை மேற்கொள்வேன் எனவும், வடகிழக்கில் இடைக்கால நிர்வாக சபையினை அமைப்பேன் எனவும் கூறப்பட்டிருந்தது.

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் தத்தமது பிரச்சார கொள்கைகளை வெளிப்படுத்தினார்கள். இவர்களில் ஜே.வி.பி. யின் சார்பில் போட்டியிட்ட நந்தன குலதிலக, புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் போட்டியிட்ட வாசுதேவ நாணயக்கார போன்றோர் பொதுக் கொள்கையின் அடிப்படையில் நாட்டின் சமத்துவக் கொள்கை சார்பாக பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

புதிய ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றிருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர்களின் பிரச்சார விடயங்கள் எதிரணிகளை அம்பலப்படுத்துபவையாகவும், அவர்களின் பிரச்சாரங்களை விமர்சிப்பதாகவுமே காணப்பட்டிருந்தன. குறிப்பாக, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் பிரச்சாரம் ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் தெரிவித்ததாக கூறப்பட்ட "வடகிழக்கை இரண்டு வருடத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நிர்வகிப்பதற்காகக் கொடுப்பேன்" சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன்" என்ற கூற்றுக்களை விமர்சிப்பதாகவும், அவற்றினைக் கண்டிப்பதாகவும், அவற்றின் மூலம் சிங்கள மக்களிடம் தன் செல்வாக்கினை அதிகரிக்கவும் முயற்சிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பிரச்சாரம் ஜனாதிபதியின் இந்த பிரச்சாரம் பொய்யானது எனவும் அவரைக் கேலி பண்ணுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சனம் செய்வதாகவுமே அமைந்திருந்தது.

1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் திட்டமிட்ட வன்முறையைப் பரப்பும் நடவடிக்கையும் முக்கியமான இடத்தினைப் பெற்றிருந்தது. அதாவது, இலங்கையின் தேர்தல் அரசியல் கலாசாரம் வன்முறை அரசியல் கலாசாரமாக வளர்வதற்கு இத்தேர்தலும் உதவியது. அத்துடன் 13 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்டமையும் பிரச்சாரத்தில் நாட்டின் எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிட்ட கொள்கைகள் என்பதற்கு புறம்பாக வன்முறையாகவும், எதிரணிகளை விமர்சிப்பதாகவுமே காணப்பட்டிருந்தது. எனவே, பிரச்சார விடயத்தினை முடிவாக நோக்குமிடத்து வெறுமனே எதிரணியினை அம்பலப்படுத்துபவையாக மட்டுமல்லாமல், திட்டமிட்ட வன்முறையை பரப்புவதாகவும் காணப்பட்டது எனலாம்.

1999ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலானது நாட்டின் ஜனாதிபதியினைத் தெரிவுசெய்வதில் மிகவும் போட்டியாக காணப்பட்டது.

| வேட்பாளர்கள் | பெற்ற வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க (பொ.ஐ.மு) | 43, 12, 157 | 51.12 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 36, 02, 748 | 42.71 |
| நந்தன குனதிலக (ஜே.வி.பி) | 3, 44, 173 | 4.08 |
| ஹரிச்சந்திர விஜேதுங்க (பூமி. புத்திர, கட்சி) | 35, 854 | 0.43 |
| டபிள்யூ. வி. எம். ரஞ்சித் (சுயேற்சை-2) | 27, 052 | 0.32 |
| ராஜுவ விஜேசிங்க (லிபரல் கட்சி) | 25, 085 | 0.30 |
| வாசுதேவ நாணயக்கார (இ.ஐ.மு) | 23, 668 | 0.28 |
| டெனிசன் எதிரிசூர்யா (சுயேற்சை-1) | 21, 119 | 0.25 |
| அப்துல் ரசூல் (முஸ்லீம் கட்சி) | 17, 359 | 0.21 |
| கமல் கருணாதாச (ம.இ.மு) | 11, 333 | 0.13 |
| ஹட்சன் சமரசிங்க (சுயேச்சை-3) | 7, 184 | 0.09 |
| ஆரியவன்ஸ திஸநாயக்க (ஐ.ஐ.தே.மு) | 4, 039 | 0.05 |
| அல்விஸ் வீரக்கொடி (பொ.வி.மு) | 3, 983 | 0.05 |
| செல்லுபடியான வாக்குகள் | 84, 35, 754 | 97.69 |
| நிராகரிக்கப்பட்டவை | 1, 99, 536 | 2.31 |
| மொத்தவாக்களிப்பு | 86, 35, 290 | 73.31 |
| பதிவான வாக்காளர் தொகை | **117, 79, 180** | |

1999ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் வெற்றி பெற்றார். அவர் பெற்ற மொத்தவாக்குகள் 43,12,157 ஆகும். அதாவது 51.12 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவர் பெற்ற வாக்குகளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும் பொழுது குறைவான வாக்குகளையே பெற்றுள்ளார். 1999ம் ஆண்டுத் தேர்தலில் 62.28 வீதமான வாக்குகளைப் பெற்று அதிக பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் 1999ல் சொற்ப பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்த வாக்குகளைப் பெறாமல் தோல்வியினையே தழுவிக் கொண்டார். இவர் 36,02,748 வாக்குகளைப் பெற்றார். அதாவது, 42.21 வீதமான வாக்குகளாகும். 1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி யின் சார்பாக போட்டியிட்ட நந்தன குனதிலக 3,44,173 வாக்குகளைப் பெற்றார். இதனை கடந்த காலத்தில் அதாவது 1994ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் பொழுது அதன் வாக்கு அதிகரிப்பினை அவதானிக்கலாம். முடிவாக, 1999ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை நோக்கும் போது சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் 51.12 வீதமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையும், ஏனைய வேட்பாளர்களின் முடிவுகளையும், அவர்களின் வளர்ச்சி, வீழ்ச்சியினையும் அவதானிக்க முடிகிறது.

1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்கு வழிவகுத்த காரணிகளை ஆராய்வதும் அவசியமானதொன்றாகும். இந்தவகையில், சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குப் பலகாரணிகள் பின்னணியாக இருந்துள்ளன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாக இருந்த காரணிகளில் சிறுபான்மை மக்களின் வாக்குகளும் காத்திரமான பங்கினை வகித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் இலங்கை சிறுபான்மை இனங்களில் முஸ்லீம் பிரதிநிதியாக ஒருவர் போட்டியிட்டார். ஏனையோர்கள் அனைவரும் பெரும்பான்மை இனமான சிங்களவர்களே ஆவார்கள். இந்நிலையில் பெரும்பான்மை மக்களின் வாக்குகள் பல பிரிவுகளாக பிரிவடைந்துள்ளன. இதனால் நாட்டின் ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதில் சிறுபான்மை இனங்களான தமிழ் மக்கள், முஸ்லீம் மக்களின் வாக்குகள் காத்திரமானதாகக் காணப்பட்டன. சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு முஸ்லீம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன ஆதரவு வழங்கின. தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு கிடைக்கும் என எதிர்பாக்கப்பட்டது. இருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களின் வாக்குகளை அதிகம் பெற்றிருந்தார். அதே நேரம் வடக்கில் சந்திரிகா குமாரதுங்க அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். எனவே, சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குச் சிறுபான்மை இனங்களின் வாக்குகளும் முக்கிய பங்கினை வகித்துள்ளன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குக் காரணியாக அமைந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கட்சித் தலைமைத்துவமும் ஒரு காரணமாகும். ஐக்கிய தேசியக்கட்சியின் கட்சித் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பேட்டியிட்ட இரு ஜனாதிபதித் தேர்தல்களிலும் தோல்வியினையே அடைந்து கொண்டார். இவரது கட்சித் தலைமைத்துவத்தின் கீழ் சில ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள் கட்சித்தாவலில் ஈடுபட்டதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவினையும் வழங்கி வந்தார்கள். குறிப்பாக 1999 ஆம் ஆண்டு நவம்பர் 05ம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், ஆகியோர் ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக்குழு ஒன்றை அமைத்ததுடன், அவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவினையும் அளித்திருந்தனர். அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும் பொழுது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முதலாளித்துவ உலகமயமாக்கலுக்கு நேரடியாக அடிமையாகியதுடன் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களுக்குரிய இடம் அளிக்கப்படவில்லையெனவும், சர்வாதிகார தலைமைப்பீடத்துக்குள்ளான தொன்றாக அமைந்துள்ளது எனவும் குறிப்பிட்டனர். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சிப் பூசல், தலைமைத்துவம், கட்சித்தாவல் என்பன பலம் வாய்ந்த எதிர்க்கட்சியின் அமைப்பில் உடைவினை ஏற்படுத்த அதன்வழி ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மேலும் பலம் வாய்ந்ததாக அமைவதற்கு வழியேற்பட்டது. இதன் வழி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக வெற்றி பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உடைவும், தலைமைத்துவமும் ஒரு காரணமாக அமைந்து விட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரச்சார விடயமும் சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்கு வழிகோலியது. ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் ரணில் விக்ரமசிங்க அவர்கள் தான் வெற்றி பெற்றால் சந்திரிகா குமாரதுங்க அவர்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன் எனவும், வடகிழக்கு நிர்வாகத்தை இரண்டு வருடத்திற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் தாரைவார்த்துக் கொடுப்பேன் எனக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்ட செய்தியினை சந்திரிகா குமாரதுங்க அவர்கள் தனது தேர்தல் பிரச்சார விடயமாக மாற்றிக் கொண்டு அதன் மூலம் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடம் ஆதரவினைப் பெற்றார். அதாவது, இனவாதத்தினையும் தனது பிரச்சாரத்துடன் வழிநடத்திச் சென்றார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாக 1999 டிசம்பர் 18ந் திகதி சனிக்கிழமை இரவு கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பும் முக்கிய காரணியாக அமைந்தது. ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரச்சாரக்கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொழும்பு மாநகரசபை மைதான பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது இடம்பெற்ற தற்கொலை குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஜனாதிபதி கண் ஒன்றை இழந்ததுடன், காயங்களுக்கும் உள்ளாகினார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இடையில் பலத்த போட்டி நிலவும் என முன்னர் எதிர்பார்த்த போதிலும் சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு தேர்தல் கள நிலமையில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தினை ஏற்படுத்தியது எனலாம். இதனால், சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு நாட்டுமக்கள் மத்தியில் அனுதாப அலை எழுந்ததன் காரணமாக தங்களது வாக்குகளை சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு அளித்துள்ளனர். எனவே, குண்டுவெடிப்பும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களும் சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாக அமைந்துள்ளன.

சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாக தேர்தல் மோசடிகளும் இருந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கும் பொருட்டு வெளிநாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டபோதும் தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற கள்ள வாக்குச் சாவடிகள் திணிப்பு, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்சிச் சார்பாளர்கள், ஆதரவாளர்களின் அடாவடித்தனங்கள், பலாத்காரங்கள் என்பன எதிர்கட்சியின் வாக்களிப்பில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றிக்கும் வழிவகுத்துள்ளது எனலாம்.

சந்திரிகா குமாரதுங்க அவர்களின் வெற்றியானது மேற்கூறப்பட்ட பிரதான காரணங்களினால் கிடைத்துள்ளதாக கூறப்பட்ட போதும், தான் 1994ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது, மிக குறைவான வாக்கினையே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் தான் ஜனாதிபதியாக வரும்போது கூறப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமையும், வடகிழக்கு யுத்தங்களும் அதனால் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சேதங்களும், சிறுபான்மை மக்களின் வெறுப்பும் காரணமாக அமைந்துள்ளது. அதே நேரம் ஐக்கியதேசியக் கட்சி 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்கினைப் போலன்றி, இம்முறை கூடுதலான வாக்குகளைப் பெறுவதற்கும் இக்காரணங்கள் வழிகோலியமையினையும் குறிப்பிடலாம்.

## ஜனாதிபதி முறைமைபற்றிய கருத்துக்கள்

ஜனாதிபதி முறையானது பாராளுமன்றத்தை அச்சுறுத்தும் அடிமைப்படுத்தும் அரசியல் குணாம்சங்களை வளர்த்துள்ளன எனக்குறிப்பிடலாம். தனிநபர் ஆட்சியைத்தீவிரப்படுத்தி அடிமைத்தனம் கொண்ட பாராளுமன்ற அரசியல் நாகரீகத்தை வளர்த்தெடுப்பதையே இம்முறை அதிக நோக்கெல்லையாக கொண்டுள்ளது. இவ்வகையில் ஜனாதிபதித்துவ ஆட்சி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

1. அரசின் தலைமையும் அரசாங்கத்தின் தலைமையும் தனி நபரின் கையில் இருப்பது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது. பிரதமரின் கையில் இரு அதிகாரங்களும் இருப்பதிலும் பார்க்க, ஜனாதிபதியின் கையில் இருப்பது அபாயகரமானது. ஏனெனில் பாராளு மன்றத்தின் முடிவுடன் பிரதமரின் அதிகாரம் முடிந்துவிடும். ஆனால், ஜனாதிபதி முறையில் பாராளுமன்றத்தின் முடிவு ஜனாதிபதியின் அதிகாரத்தை முடிவுறுத்துவதில்லை.

2. அமைச்சுக்களை தமக்குத் தாமே ஒதுக்கிக் கொள்ளவும் ஏனைய அமைச்சுக்களை தீர்மானிக்கும் அதிகாரம் கொண்டிருக் கின்ற படியால் தான் தனி அமைச்சரவையாகவும் செயற்பட முடிகின்றது. இது தனிநபர் அதிகாரத்திற்கு வழிவகுக்கின்றது.

3. ஜனாதிபதியின் செயற்பாடுகளை நீதி மன்றம் மீளாய்வு செய்யமுடியாது. இதன் மூலம் வெளித்தடைகள் எதுவும் அற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. செயலுக்கும் செய்யாமைக்கும் (Actor omition) இங்கு பாதுகாப்பு உண்டு.

4. ஜனாதிபதிக்கான ஆலோசகர் முறை அரசாங்கத்திற்குள் ஓர் அரசாங்கம் இயங்குவது போன்ற நிலைமையைச் தோற்றுவித்துள்ளது. இவ்வாலோசகர்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவர்கள் அல்ல.

5. அரசியலமைப்பின் மூன்றாவது திருத்தம் ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாட்டிற்கு வழிவகுக்கின்றது. நான்கு ஆண்டை பூர்த்தி செய்ததும் தன்னிச்சையாக மேலும் ஒரு பதவிக் காலத்திற்கு தேர்தலில் போட்டியிடலாம் என்பது வாக்குகளை தவறான வழியில் கவருகின்ற வழி என கொள்ளப்படுகின்றது.

6. ஜனாதிபதி எதிர் பாராளுமன்றம் தோன்றும் போது அரசியல் நெருக்கடி உருவாகலாம். ஜனாதிபதியின் அரச கொள்கைக் கூற்றை பாராளுமன்றம் ஏற்க மறுக்கலாம். ஜனாதிபதிக்கு ஏற்பில்லாத வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றம் நிறைவேற்றலாம். இந் நிலமை ஜனநாயக வீழ்ச்சிக்கு அச்சுறுத்தல் மட்டுமின்றி, ஆபத்தானது மாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இந்தியாவில் பல முறை சிந்திக்கப்பட்டு கைவிடப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இம்முறை வெற்றி பெற்றுள்ளமையை கொண்டு இலங்கையில் நிலைநிறுத்த முயல்வது அரசியல் கலாசாரத்திற்கு கடினமான விடயமாகும். மேர்வின் டி. சில்வா (Mervin de silva) ஜனாதிபதித்துவ முறை இலங்கையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை பின்வருமாறு முன்வைக்கின்றார். '1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி இம்முறையை ஒழித்து விட மக்களின் சம்மதத்தைப் பெற்றது. 1978ஆம் ஆண்டு தொடக்கம் 1994 வரையும் ஐக்கிய தேசியக்கட்சியும் 1994 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பொதுஜன ஐக்கிய முன்னணியும் இம்முறையின் கீழ் செயற்படுகின்றன. ஆயினும் இம்முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்' என்றார்.

பொதுஜனஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி உட்பட பல கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஜனாதிபதித்துவ முறை மாற்றியமைக் கப்பட்டு பாராளுமன்றத்திற்கு பதில் கூறக்கூடிய 'வெஸ்ட்மினிஸ்டர்' முறையிலான நிர்வாகம் மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கூறிவருகின்றனர். மேலும் சில கட்சிகள் இம்முறை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானதென்றும் இதில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் நடைமுறைப்படுத்தலாம் எனவும் கருதி வருகின்றன. இன்று நடைமுறையில் இருக்கும் ஜனாதிபதி முறையினை நோக்கும்போது இப்பதவியும் அதன் தெரிவு முறையும் சிறுபான்மை மக்களுக்கு ஓரளவு சாதகமானதாகும். ஜனாதிபதி வேட்பாளர் முழு இலங்கையையும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதி போட்டியிடுவதால் வெற்றி பெறுவதற்கு பல்லின மக்களது ஆதரவையும் கருத்திற் கொண்டு ஒற்றுமையின் சின்னமாக செயற்பட வேண்டியுள்ளார். இந்நிலையில் சிறுபான்மை மக்களது அரசியல் அபிலாசைகளையும், உரிமைகளையும் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டிய பொறுப்புக் காணப்படுவதால் இவர்களது கோரிக்கைகளை ஜனாதிபதி புறக்கணிக்க முடியாத சாதக நிலை காணப்படுகின்றது. மறுபுறமாக அவதானிக்கையில், 23 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையால் சமூக, பொருளாதார, அரசியல் விருத்திகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந் துள்ளது எனக் கூறமுடியாது. மாறாக எதேச்சதிகார அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதைத்தடுக்கும் சக்தியற்றதாக பாராளுமன்றம் உள்ளது. இவ்வாறே இம்முறை தொடர்ந்தால் தனிநபர் ஆட்சிக்கு இந்நாட்டை இட்டுச் சென்று ஜனநாயகப் பண்பியல்புகள் இல்லாமல் போய்விடலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. Wilson. Jeyaretnam. A. - 1988 **The Break up of Sri Lanka, The Sinhala – Tamil conflict,** C.Hurst & CoLondon.
2. Wilson Jeyaretnam A. - 1979 **' The New Constitution'** Tribune Ceylon news review Vol 23
3. Perea N.M - 1979, **Critical Analysis of the New Constitution of Srilanka Government,** star press, Colombo
4. - 1998 **Draft constitution of Srilanka critical aspects,** Law and Society Trust Colombo.
5. Ward & Philips - 1980 **Constitutional Law** Oxford University press,
6. Abeynaike H.B.W-1983 **Parliament of Sri Lanka**, The Associated News papers of Limited, Lake House Colombo,
7. **The Constitution of the Domocaratice socialist Republic of Sri Lanka,** Printed at the Department of Government printing, Sri Lanka, Certified on 31st August, 1978.

# Education in the conflict areas in Sri Lanka

- M.Selvarajah -

## 1.0 Background

*Sri Lanka is one of the few countries in Asia with a literacy rate of 95% and health indicators place her at the level of a developed country. This was possible only by the educational changes that were introduced in the 1940s. A comprehensive programme of free education and compulsory schooling from age 5-14 were introduced in 1945. Now, Sri Lanka is at another turning point that is to meet the global market and at the same time 30% of her territory and 15% of her population have been devastated by an internal war that was started in 1983.*[1]

*Upto early 1970s minority Tamils were making protests over various issues using ahimsa methods. Non violent methods such as Satiyagraha and processions were adopted as the ways of protest over some issues- Sinhala only Act of 1956, Bandaranayake – Chelvanayagam pact of July 1957 ,Siri riots of April 1958, minimum demands of federal party of March 1960, Dudley Senanayake – Chelvanayagam agreement of March 1965, Republican constitution of May 1972 and standardization of University Admission in 1972. Because of the non-violent methods adopted as protest, there was not much of a disturbance to education and schools system. If there was disturbance to schools that was only a few days closure of schools. Vaddukoddai resolution of 1976, which had a concept of a separate state was a vital turning point in the history of the ethnic problem in Sri Lanka. With the black July disturbances in 1983 the civil war started and severely affected all the sections including industry, agriculture and education.*[2]

*The impact of the internal war is immeasurable on the country as a whole. The cost of war in Sri Lanka encompasses all the losses related to economic, human, socio- political and moral losses. The economic cost includes the cost of financing the war, the value of physical assets damaged and destroyed in the North - East and other parts of the country. Due to the war, the economic output and the*

*opportunities of growth and development have foregone. The direct expenditure incurred both by the government and the LTTE from 1983 to 1996 was about Rs. 228 billion in 1996 prices. This is a stricking indicator of the burden that our people of all the communities in Sri Lanka have to bear. The economy of the country would have grown at a higher rate if not for the war and the loss of gross domestic product (GDP) over the 14 year period would be as high as Rs. 2340 billion in 1996 prices* [3]

*Since 1970s ,ethnic conflicts and political unrest have costed more than eighty thousand lives in Sri Lanka* [4]*. The human loss is invaluable and comprises the death and injury of militants and civilians, the anguish of the bereaved widows, orphans, relations and friends , displacement of people, homelessness. This loss is immeasurable and cannot be reduced to economic values. However, economic cost of all these such as lives lost through death and injury, the earning activities disrupted through displacement, the skills of those who have taken refuge abroad , the cost of maintaining the displaced and rehabilitating them is huge. The socio- political consequences of the war have been deep and wide. People lost the sense of security and the freedom of movement which people enjoyed in their day to day life. An internal war can damage the value system of the people and the moral foundation of a society. It fosters a culture of violence in the whole society.*

*Access to lethal weapons has become easy and violence intrude various political and social institutions and undermine democratic process. Armed culture relaxed the control of accountability. It opens the way for large scale corruption and disregard of civic rights and obligations . On the whole all kinds of costs of the internal war is borne by all the communities in Sri Lanka-Sinhala, Tamil and Muslim. The government of Sri Lanka and the Tamil militant group mobilize vast financial and human resources and throw them into the war.* [5]

*The actual expenditure on defence under different agencies had been on the increase from 1976. The total expenditure of Ministry of Defence, Sri Lanka Army, Sri Lanka Navy, Sri Lanka Air Force and Police department has been on the increase from 1976 to 1996. In 1976, the total expenditure was Rs.0.334 billion and in 1996 it was Rs. 39.2 billion*[6] *. From 1983 to 1996 there has been a sharp increase from 1.512 billion to 39.2 billion . The total defence expenditure in the percentage of GDP has been 1.1. billion in 1982 and 6 billion in 1996.*[7]

*The objective of this essay is to focus on the school system, teaching, learning and management of schools in the war affected North - East Province of Sri Lanka and to bring out certain reality in the prevailing situation.*

## Education in the North East

*Education sector in the North – East Province encompasses 1977 schools spread over 8 administrative districts and 72 administrative divisions. North-East is the biggest prov-*

*ince in Sri Lanka as it comprises two provinces. Of the 1977 schools 1938 are provincial schools, 32 are national schools and seven are private schools. Apart from these schools, there are four TeacherTraining Colleges, three colleges of Education, three Affliated University Colleges and three Universities. In addition, there are technical colleges and a college of music and dance. Access to education in the North-East during the last 15 years is very much disturbed due to the internal war. Lack of security , poverty and floating nature of people, particularly in the military operation areas have distracted parents from sending their children to school. People feel life and security first and everything else is next. Equity in educational opportunities is not possible due to shortage of staff, equipment and other facilities. Internal efficiency in the system of education is impaired by shortage of staff to administer education offices. The shortcomings of the system have made education unattractive. Dropout rates and repetition rates have been increased.*[8]

## 2.0. Schools and impact of war

*The school system in the North Eastern Province had suffered severely due to the consequences of the war. Many schools are closed due to the military operations and functioning in alternate locations. The Riverasa campaign resulted in the closure of 275 schools in the Valikamam Zone in the Jaffna district and 100,000 students left the schools. Jayasikuru campaign resulted in the closure of 80 schools in the Vavuniya district*[9] *. The following*

**Table No-1- Displaced and closed schools**

| District | Displaced | Temporarily Closed |
|---|---|---|
| *Trincomalee* | - | *11* |
| *Batticaloa* | *10* | *06* |
| *Kalmunai* | *06* | *01* |
| *Ampara* | - | *03* |
| *Vavuniya* | *18* | *05* |
| *Kilinochi* | *12* | *05* |
| *Mannar* | *07* | *21* |
| *Mullaitivu* | *11* | *10* |
| *Jaffna 1* | *02* | *42* |
| *Jaffna 2* | *28* | *16* |
| **TOTAL** | ***94*** | ***141*** |

**Source : Ministry of Education Cultural Affairs & Sports – NEP - 1998**

*table gives the details of closed and displaced schools in the North-East Province at present.*

*Most of the displaced schools in the North and East function in temporary locations under thatched roof and mud or sand floor. Temporary sheds cannot last for more than 2 years and they are open sided. Classrooms are very crowded and children sit on the floor. In many small schools classes are conducted under trees. During the rainy seasons displaced people flock there to avoid rain. Learning atmosphere is not available in the schools that are temporarily functioning in alternate places. Government military personnel had occupied schools' for security reasons. Those schools are closed and are functioning in some other schools compound managed by its own principal. Children do their lesson sitting on the floor or on mats donated by organizations like UNICEF.*

*Army camps are located closer to many schools and some schools are functioning within the limit of army camp areas. Students and teachers are allowed to go to the school during school hours . Such a situation creates fear and tension for the normal functioning of schools and the students and teachers are liable to death and injury when there is firing and shelling from army camps and armed groups.*

*Infrastructure facility in the war affected areas in North and East is far from satisfactory . This includes road, communication facility, health, electricity, water supply etc. These are the prime contributory factors for educational development. The negative effect of these unsatisfactory factors has tremendous effect on education. Students learn with the help of kerosene oil lamp which is also in very limited supply.*

*Further, some of the items such as audio visual equipment, generators, chemicals, science equipment, photo copying machine, overhead projectors are not available in many schools and are not supplied for security reasons. Lack or limited supply of these items affect satisfactory functioning of schools.*

*Sanitory conditions in many displaced schools are not satisfactory. Many displaced schools have no clean/ pure water for drinking purpose. Lack of pure water creates lot of health problems. In many displaced schools students suffer from several diseases, including diarrhea and typhoid which are most common. These are common problems in the refugee camps and in the displaced schools. It has been reported that in Vanni alone 86 schools had no clean water to drink. Another problem identified is lack of latrine facilities in displaced schools. Materials for tube well and construction of latrines in the schools are restricted by the Ministry of Defence.*

*In some schools temporary latrines create lot of inconvenience to students and teachers. Displaced schools function without furniture. Children sit on the floor and study. There are no secure place for storage and no steel cupboards. Due to these reasons school properties are stolen.*

*One of the Deputy Directors of Education in a Zonal Education office in the eastern region said in an interview.*

*" Recently I have visited a displaced school which is functioning in a temporary shed. Children were sitting on the floor and doing the work. I sat with them for a while and talked to them and found my trouser wet because the floor was wet sand . But our children sit on this type of floor all the time. Imagine how much of their health can be affected" A major factor that affect successful functioning of schools, is shortage of buildings. The table below shows the shortage of school building in the North-East[9].*

**Table No-2- Shortage of Buildings**

| ITEM | QUANTITY |
|---|---|
| *Classroom* | *4366* |
| *Office room* | *746* |
| *Single unit lab.* | *273* |
| *Double unit lab.* | *103* |
| *Four unit lab.* | *46* |
| *Main lab.* | *793* |
| *Teachers Quarters* | *1280* |
| *Principals Quarters* | *1151* |
| *Latrine* | *1124* |
| *Urinals* | *917* |

**Source :- Ministry of Education Sport and Cultural affairs. NEP1998.**

*The above table shows that there is a servere shortage of building facilities in the school system in the North-East Province. This is a major factor that affect successful functioning of schools.*

**Table No - 3 - Shortage of Furniture**

| ITEM | QUANTITY |
|---|---|
| *01. Desks ( types A,B and C )* | *1,20,750* |
| *02. Chairs ( types A,B and C)* | *1,27,558* |
| *03. Teachers Table* | *7,880* |
| *04. Teachers chairs* | *8,534* |
| *05. Black Boards* | *8,130* |

**Source : Ministry of Education, Sports & Culture - NEP, 1998**

*These are the basic facilities provided for the functioning of classroom- teaching and learning. The war situation has created such a severe shortage of furniture . This is due to the displacement and closure of schools.*

*Shortage of office equipment facilities in the North-East are shown in the table below .*

**Table No - 4 : Office Equipment**

| ITEM | QUANTITY |
|---|---|
| *01. Photocopy machine* | *304* |
| *02. Roneo machine* | *526* |
| *03. Type writers ( Tamil, Sinhala,English)* | *1647* |
| *04. Steel cabinet* | *2944* |
| *05. Teachers Chairs* | *8534* |

**Source : Ministry of Education, Sports & Culture - NEP, 1998**

*In the present context item no. 1,2 and 3 are essential if not others for the functioning of schools. As the people displaced due to operation ,school furniture and equipment are stolen. Lot of facilities of schools are lost or burnt.*[10] *This happened even in a University in the East when the University buildings became a refugee camp in 1990 due to major army operations in the Batticaloa district. Millions of rupees worth of furniture, equipment, computers were lost when large number of refugees flocked to the University buildings.*[11]

## 3.0 The impact of war on students

*The ethnic conflict affected the student population since 1983 and the quality of learning has been disrupted to a greater extent. Due to military operation families which is catchment of students have been displaced to other areas. Many of them are herded to the refugee camps. As a result 25% of the potential students population are not attending schools. The following are the student enrolment in three districts in the Vanni in 1997.*

**Table No: 5- Displaced Students**

| District | Permanent | Displaced | Total |
|---|---|---|---|
| *Kilinochi* | *19761* | *20789* | *40550* |
| *Mullaitivu* | *22019* | *23822* | *45841* |
| *Mannar* | *5906* | *3789* | *9695* |

**Source : Ministry of Education, Sports & Culture - NEP 1998**

*In a recent study ,13.3% of the school children are displaced presently in Jaffna as their homes were within the security zone or their houses have been destroyed. However 85.7% of the children had been displaced at some time and 1.3% of the children displaced more than 4 times.*[12]

*The students who attend schools from refugee camps cannot have a familial atmosphere in which they used to study. Their normal behaviour and leisure activities are thwarted. The facilities to study at homes or refugee camps are at a very low level and constantly they are under fear of harassment. They are also deprived of the supply benefits enjoyed by other students like free text books, free uniforms and sports facilities. They have poor health and under nutrition or malnutrition making them weak and tiresome and they have no motivation to learn.*[13]

*Number of school children with special needs have increased over the years due to conflict. According to studies only small percentage of the students receive attention on their special needs. The following are the numbers of special need students (and the percentage) in Vanni districts.*[14]

**Table No - 6 Special need students**

| District | No.of students | Percentage |
|---|---|---|
| *Mullaitivu* | *6158* | *15* |
| *Kilinochi* | *4043* | *10* |
| *Mannar* | *1154* | *12* |

**Source : Ministry of Education, Sports & Culture - NEP, 1998**

*Study shows, in Jaffna, 5 out of eleven disabled children were deaf and or dump (45%) and 35% of the disabled had limb disability.*

*Where people become displaced, there is usually a short period during which there are no schools to attend. However as people became stabilised, the displaced staff start a school in the new place and children start attending the school. The school attendance is however affected due to the displacement. According to a study in Jaffna district 12% of the school going children could not attend school for more than 12 months .*

*An analysis of non attendance by age group shows that the percentage of non attendance is highest in the 15-19 years age group where 46.8 % do not attend school. Poverty , helping family , disability, sickness in the family are some of the reasons for non attendance.*[15]

*In certain villages people carry out lagoon fishing in the North and East . Usually the whole family takes part in fishing and its sale. Because of the curfew at night the fishing process starts at 4 .00 a.m. and goes on till noon. As a result most children of age 10-14 years who accompany their fathers and other elders cannot attend school.*[16]

*Loss of birth certificates during displacement due to military operation is a common problem in the conflict areas. People had to leave their home quite suddenly without taking any documents and 51.5% of the parents had lost the birth certificate of their children during displacement and one percent of the births were not registered at all in Jaffna district. Nearly 50-60 births are not being registered every year in Jaffna. When the children are to be admitted to school lack of birth certificate becomes a problem.*[17]

*Number of young girls have fallen victims to rapists in the NEP and as a result there are children without fathers. For the mother and child, the future is a question unless some agency takes care of, these children are going to face problems in society throughout their life starting from the registration of their life.*[18]

*In Vavuniya district only about 50% of those students who complete primary education proceed to secondary education and less than 5% of them continue to higher education. Presently about 95% of high school students and many secondary school students are dropping out of schools. Due to recent displacement about 10,000 students and 600 teachers live in the refugee camps . Schools have been converted into refugee camps. Inadequate accommodation of the displaced students is a critical problem which also affects the quality and content of education.*[19]

*Dropout from school is another factor that affects quality and quantity in education. Students dropout from schools for various reasons. Poverty, lack of transport facility, helping family to lookafter the younger brothers and sisters are a few reasons. In Batticaloa more than 2000 students are identified in some villages who are dropped out from schools. Similar situations are observed in other districts too. In some districts efforts are taken by NGOO to educate dropout and non school going children.* [20]

*In the North- East province, areas are identified as cleared and uncleared areas. Cleared areas are the areas that are controlled by government forces and uncleard areas are those which are not under the control of government forces. Certain areas are neither controlled by army nor by armed group. Batticaloa North is an example for such an area. Both army and armed group frequently move into these areas and there are confrontations between them. Schools ,located in these areas suffer grievously. In an interview with the parents, teachers and students in a school in this area , one teacher said.*

*"When children hear firing they immediately run home even, without telling the teachers"*[21]

*one parent said*

*"There was a confrontation between army and LTTE few months back. It lasted nearly one hour. We took our children and went to the bushes near by and stayed there till evening children started to cry for want of water and food"*[22]

*Because of these direct confrontation and attack, children are psychologically affected. Few children in another school in this area were observed. Some children have lost both parents and they are badly in need of motherly love. They expect the same love from teachers and principal . It is also observed that such children are mentally not developed to their age. A teacher said pointing to a particular child in grade three*

*" She used to hang on teachers hand and sometime sit on the teacher's lap"*[23]

*The child is in want of parent's love.*

*In another school in the same area which is a Maha Vidyalaya located near an army camp, teachers and students were interviewed. Few weeks ago, there was a firing from an armed group near the primary section of the school which*

*is located near the playground. Bullets damaged few tiles of the roof and a piece of tile fell on the head of a grade 2 child. All children and teachers fell on the ground as they were used to this kind of situation.*

*A Teacher said*
*" All children cried*
*Amma! Amma! Kadavule*
*Kappatu ! Kadavule*
*Kappatu"[24]*
*( mother, mother, oh, god save us oh, god save us)*
*Another child told his father*
*" Are you going to kill me*
*by sending me to school"[25]*

*Wars and conflicts violate every right of a child, the right to be with the family and community, the right to be nurtured and protected, the right to develop a unique personality, the right to health, the right to education, some times even the right to life. Approximately 90000 children in the North and East of Sri Lanka are directly affected by the current conflict. In addition, millions of children in the rest of the country are indirectly affected. [26]*

## 4.0 The impact of the war on Teachers and Teaching process

*Effective functioning of schools depend on the role and functions of teachers. Problems related to teachers are unique in the war torn North and East.Teachers are reluctant to assume the post of teacher in conflict areas eventhough there is a considerable unemployment problem in Sri Lanka in certain districts in Vanni. In 1997 the teacher shortage in Mullaitivu was 49% in Kilinochi 31% and in Mannar 45%. [27]. The following is the districtwise teacher shortage.*

*Because of the severe shortage of teachers classrooms become over crowded which affect the quality of teaching. While national level teacher*

**Table No - 7 : Teacher shortage**

| District | No. of Teacher |
|---|---|
| *Trincomalee* | *507* |
| *Batticaloa* | *1238* |
| *Kalmunai* | *512* |
| *Vavuniya* | *583* |
| *Mannar* | *426* |
| *Kilinochi* | *757* |
| *Mullaitivu* | *501* |
| *Jaffna* | *1158* |
| **TOTAL** | *5783* |

**Source : Six year Primary Education Development Plan ( 1999-2004) Ministry of Education. Sports & Culture. NEP 1998**

*pupil ratio is 1:23, it is 1:50 in Kilinochi 1:47 in Mannar and in Mullaitivu 1:49 Many teachers assume duties when they are posted to schools in the conflict areas and make efforts to get a transfer from there. As a result there is an acute shortage of teachers in the conflict areas.*[28]

*Teachers who teach in schools, located in the conflict areas, are not motivated to do their profession because of the prevailing fear, lack of basic facilities, teacher- pupil ratios being high, lack of reference materials and aids and lack of supervision. The system of education in the North East has to be managed with the help of volunteer teachers. For example in Kilinochi 30% of the teachers are volunteers. In general in Vanni areas volunteer teachers sometimes make up over 60% of the staff. These are more numerous in the primary than the secondary section*[29] *. In Jaffna district there are 1500 volunteer teachers in schools and they are paid by the community. In Batticaloa Trincomalee and Amparai districts also the schools engage volunteer teachers with the help of the community support. In small schools , the Principal with only one volunteer teacher has to cover all teaching and management functions in the school. If the Principal takes leave the volunteer teacher has to do all teaching and management functions of the school. This situation affect teaching and learning*[30] *.*

*This is a common feature in majority of the conflict areas in NEP. For efficient performance of teaching function, the teacher needs to spend considerable hours of time in planning and preparing his/her time in school and home. But many schools in the conflict areas in the NEP use teachers to get the clerical work done. This is mainly because of shortage of teachers. The available teachers do the clerical work in addition to the normal teaching .*

*In the present context of new education reforms, teachers are expected to do the school based assessment which consume a good portion of the time, if they are to do the clerical work of the school in addition, this may reduce the efficiency of the teacher and affect the quality of education.*

*Round ups are carried out very often almost every month in the army controlled areas by military personnel to identify armed group cadres if there are*[31] *. Every one in a particular area are asked to gather in a particular place. Teachers, students and government officers also should go to the place. They are released after checking at about 9.00 a.m. Teachers some times are asked to do a translation when the chief military official gives instructions in Sinhala to the people gathered. This creates tension in the teachers. Teachers and students are released and they go to school late and teachers are not in a position to teach satisfactorily. Normal function of school is affected and attendance is reduced by the pratice of round ups*[32] *.*

*Both teachers and students have to pass several check points before they reach the schools. Most of the teachers have the difficulty of passing*

*the check points on the way to school. A teacher is checked atleast at 7 check points before he/she reaches the school if the school is located 10 k.m. away from his/her home. This is also a factor that affects the work of the teacher in the schools. Some time the checking will be more serious depending on the situation*[33] .

*Another factor that affects teaching function is the lack of teacher training curriculum . Teachers in the conflict areas have a special need and they function in a unique situation. The curriculum for teacher training in the North-East is not designed to meet the needs of the unique situation prevailing . Refering a firing incident while a teacher was in the school she said.*

*"I was in the playground for sports practice Suddenly there was firing from one direction. I lay down on the ground and crowled about 200 metres to reach the school compound. Still I cannot think of going to that side"* [34]

*Teachers function in the schools, in this kind of situation. Due to the limitation of authority, provincial education authorities are not free to recruit the required teachers in the North-East. There are more than 4500 teacher vacancies in the approved teacher cadres . Although the province has the necessary financial resources to pay their salary , they are unable to do it.*

**Table No. 8 - Approved Teacher Cadre**

| Schools | Approved cadre | Available | Shortage | Shortage % |
|---|---|---|---|---|
| *Provincial* | *28252* | *23204* | *5048* | *17.84* |
| *National* | *2223* | *1719* | *504* | *22.67* |
| **Total** | **30475** | **24923** | **5552** | **18.22** |

**Source : Ministry of Education, Cultural Affairs & Sports NEP - 1998**

## 5.0 Impact of the war on School Management

*Management of schools in the conflict areas is not normal , as it was 15 years ago. It has become a risk management, considering the prevailing situation in North-East. Shortage of human and physical resources is a severe problem to the school principals. They are always under tension and have to face firing, shelling and confrontations at any time. Recently there was an incident near a school which is located close to an army camp. There was a blasting of a hand granade near the school on the main road. The whole school was disturbed and all the children in the school were frightened. They wanted to go home and the principal found it difficult to control the students and teachers.*

*Hearing the blasting near the school most of the parents came to school to take their children home. Army personnel came to school and asked the principal to come to the place of incident . The principal was told by them that the students were responsible for the incident . There was any connection of the students to which the principal had to convince the army. At an interview the principal said.*

> *" To manage the school, it is necessary to get the support of the army and the armed group"*[35]

*The principals who manage the schools in alternate places due to their schools being occupied by army have lots of problems in managing their schools. Such schools function in temporary sheds with thatched roof and mud or sand floor. Lack of furniture and severe shortage of teachers create problems to the principals. These temporary sheds cannot last more than two years. In reality school managers face severe hardships. To manage schools they have to deal with every section of the people including army and armed group. This put principals even in suspecious situation.*

*There is no management training on their recruitment. To function in a unique situation an induction training is essential. It is difficult for the principals to follow any management programme conducted in Colombo by the NIE or Ministry of Education and higher education . It is not so easy for all the principals to attend management programme conducted by Provincial Ministry of Education , North-East in Trincomalee and that is also insufficient.*

*Another problem that affect school management is lack of communication. Due to the delay in the postal service it took even one month for an instruction to reach a principal in Vanni or Jaffna and other uncleared areas. There was no direct telephone communication from Provincial Ministry of Education to some districts in Vanni. Lack of communication affects efficient management of schools and education offices. Due to this problem, important seminars and meetings could not be attended in the Ministry of Education or in the Provincial Deartment of Education.*[37] *Recently, an improvement is apparent in the communication system to give instructions to the officers from the Provincial Ministry of Education in Trincomalee.*[38]

*Another factor that affect education in the school system is the acute shortage of staff in Sri Lanka Education Administrative Service ( SLEAS) in the Zonal Education Offices. The table shows the shortage of SLEAS staff in the North-East Province. More than 80% of the SLEAS staff lacks in the NEP offices.*

**Table No.9- Shortage of SLEAS Staff**

| Areas | Required | Available | Shortage |
|---|---|---|---|
| Ministry of Education. | 29 | 04 | 25 |
| PDE'S Office | 18 | 09 | 09 |
| Districts | 475 | 89 | 386 |
| **TOTAL** | **522** | **102** | **420** |

**Source : Primary Education Plan NEP – 1998**

*The Total system of education is managed by the officers in the Zonal and Provincial education offices. The implementation of new administrative structure in education was delayed due to this shortage of staff. This number does not include the SLEAS principals. National and 1 AB type schools are entitled to have SLEAS principals numbering more than 80. With such a severe shortage of staff, an education system cannot be expected a better performance.*[38]

# FOOT NOTES

1. Divakalala S. 'Educational problems and challenges in conflict areas in Sri Lanka' 1998 - seminar paper, Kathmandu, Nepal - P1

2. Rohan Gunaratna, Sri Lanka's Ethnic crisis and National Security 1998 - P4

3. The Cost of the war. The National Peace Council of Sri Lanka 1998.

4. Sri Gamage 1B Watson (Ed) South Asia (conflict and community in contempo rary Sri Lanka) special issue vol - XX 1997 South Asian Studies Association

5. The National Peace Council - The cost of the War 1998 P - 4

6. Source : Accounts of the Government of Sri Lanka 1997.

7. Source : Central Bank of Sri Lanka 1997.

8. Six year, Primary Education Development Plan - North East Province, Ministry of Education, Culture and Sports 1998 (p1)

9. Divakalala S. Seminar paper Katmandu Nepal 1998 (P10)

10. Source : Ministry of Education, Cultural affairs & Sports NEP 1998.

11. Due to operation in 1990, Eastern University became a refugee camp - people of the area flocked in the University buildings.

12. Sivarajah N. 1998 "School aged children in Jaffna District for save the children fund - P15

13. Ibid

14. Divakalala S. 1998 - Seminar paper Kathmandu Nepal.

15. Sivarajah N. 1998 "School aged children in Jaffna District for save the children fund (UK) and Unicef

16. Ibid (P17)

17. Ibid (p22)

18. Ministry of Education Sports & Culture North East Province. An appraisal of the Education System in the Vanni area of Sri Lanka 1998.

19. Six year Primary Education Development Plan (1999 - 2000) North East Province, Ministry of Education Sports & Culture 1998. Sarvodaya in Batticaloa had organized classes for dropouts and non school going children in more than 40 villages and Trained Volunteer Teachers in early 1999.

21. A Primary School which is located in east cost teacher was interviewed.

22. Parent was interviewed in the Primary School mentioned in 21 Feb. / March - 1999

23. Interview with a teacher in the primary Division of a school in Batticaloa North March - 1999

24. Ibid.

25. Interview with parent who is an Education office in Zonal Education office in Batticaloa District, March 1999.

26. Children : Zones of peace call for action, A summary May 1999 (p7)

27. Divakalala S. 'Educational problems and challenges in conflict areas inSri Lanka' seminar paper kathmandu Nepal - 1998 (p6)

28. Divakalala S. "Education problems and challenges in conflict areas in Sri Lanka" Seminar paper Kathmandu - Nepal 1998 (p10)

29. Six year primary Education Plan - Ministry of Education, Sports & Culture NEP - 1998 (p17)

30. Ibid (p17)

31. Direct experience of the writer. This happens in the cleared areas : Everyone gets late to the work place some time many are on leave or take a half - day leave.

32. Ibid (p17)

33. Ibid (p17)

34. Interview with a teacher in a school where a firing incident took place. She was describing the incident in April 1999.

35. Interview with a Principal of School in conflict area in Batticaloa north April 1999.

36. Ministry of Education Sports & Culture save the Children fund. "An appraisal of the Education system in the Vanni areas of Sri Lanka - 1998.

37. A planning officer in the Ministry of Education, Cultural Affairs and Sports interviewed. Instructions are given to a cluster of officers by the Secretary over the telephone, July 1999.

38. Ministry of Education Sports & Culture "An appraisal of the Education system in the Vanni area of Sri Lanka - 1998.

## BIBLIOGRAPHY


01. Rohan Gunaratna, Srl Lanka's Ethnic Crisis & National Security, South Asian Net Work on conflict Research, Colombo - 1998.

02. National Peace Council of Sri Lanka, The cost of the war, Colombo - 6.

03. Divakalala S. Educational problems and challenges in conflict areas in Sri Lanka, Ministry of Education Culture & Sports, North East Province Sri Lanka.

04. The National Peace Council of Sri Lanka Don't Wage War on our Behalf Report of National Peace Delegates concentration - 1998

05. The National Peace Council of Sri Lanka Children : Zone of Peace A Call for Action (Promoting and proneding the Rights of Children Affected by Armed conflict in Sri Lanka) 1998.

06. Sivarajah N. School aged children in Jaffna District, save the children fund (UK) & (UNICEF) 1998.

07. Consortium of Humanitarian Agencies, Year book 1998.

08. International Centre for Ethnic Studies, Sri Lanka : The Development Debate, 2 Kynsey Terrace Colombo - 8 1997.

09. Ministry of Education, Sports & Culture - An appraisal of the Education system in the Vanni Areas of Sri Lanka - 1998.

10. Siri Gamage, 1 B Waston (Ed) South Asia - Conflict and community in contem porary Sri Lank, special issue, Vol.XX 1997 South Asian Studies Association.

11. Somasundaram M. (Ed) Reimagining Sri Lanka Northern Ireland Insights Inter national Centre for Ethnic Studies, 2 Kinsey Terrece, Colombo - 8, Sri Lanka - 1999

12. Ministry of Education Sports & Culture - North East Province an appraisal of the Education system in Vanni areas of Sri Lanka - 1998.

13. Ministry of Education Sports & Culture North East Province Six year Primary Education Plan (1999 - 2000)

# ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக்குரல்கள்

- செ.யோகராசா -

அரசு, மதம், குடும்பம் முதலான நிறுவனங்கள், அவை சார்ந்த கருத்து நிலைகள் (Ideology) என்பனவற்றிற் கெதிராக, இலக்கியங்களூடாக எழுப்பப்படும் குரலே 'எதிர்ப்பு இலக்கியம்' என்று சுருக்கமாக வரையறை செய்யலாம். இவ்வாறான எதிர்ப்பு இலக்கிய முயற்சிகள் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றதாயினும் எதிர்ப்பு இலக்கியம் (Resistance Literature) என்ற விதத்தில் இலக்கியத்தை அணுகும் ஆய்வுமுறை, ஆய்வாளர் மத்தியிலே அண்மைக் காலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சனநாயக ஆட்சி முறைமை அல்லது அது பற்றிய சிந்தனைகள் நிலைபூன்றிய பின்னரே இத்தகைய எதிர்ப்பு இலக்கியமுயற்சி முதன்மை பெற்றிருக்கும் என்பது வெளிப்படையானது. ஆயினும், அதற்கு முன்னர் மன்னராதிக்கம், மதநிறுவன ஆதிக்கம், நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் முதலியன இடம்பெற்றிருந்த காலகட்டங்களிலும் இலக்கியங்களூடான எதிர்ப்புக்குரல்கள் தனிமனிதக்குரல்களாக அவ்வப்போது வெளிப்பட்டுள்ளதனைப் பழந்தமிழ் இலக்கியங்களூடாக அறியலாம்.

மேலும், இவ்வெதிர்ப்புக் குரல்கள் எழுத்து இலக்கியங்களூடாக மட்டுமன்றி வாய்மொழி இலக்கியங்களூடாகவும் இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. தமிழ்ச் சூழலில் இத்தகைய எதிர்ப்பு இலக்கியங்கள் பண்டு தொட்டுக் கிடைக்கவில்லையாயினும் அதன் எச்சசொச்சங்களாக இன்று கிடைப்பன வற்றை வைத்துக்கொண்டு அதன் முன்னைய நிலையினை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும்.

இவ் ஆய்வு ஈழத்திலே நவீன கவிதை தோற்றமுற்ற காலந்தொடக்கம் இன்றுவரையிலான காலப்பகுதிகளிலே நவீன கவிதையிலும் அதே காலப்பகுதிகளில் வாய்மொழிப் பாடல்களிலும் எதிர்ப்புக் குரல்கள் எவ்வாறு இடம்பெற்று வந்துள்ளதென்பதனை கோடிட்டுக்காட்டும் முதன் முயற்சியாகும்.

ஈழத்திலே நவீன கவிதையின் தோற்றம் நாற்பதுகளின் தொடக்கமென்று கூறப்பட்டு வந்தாலும் அதற்கான கால்கோள் முப்பதுகளிலே இடப்பட்டுள்ளமை அண்மைக்கால ஆய்வுகளூடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.[1] இவ்விதத்திலே யாழ்ப்பாணப்பிரதேசம் சார்ந்த ஈழகேசரிக் குழுவினரும் மலைநாடு சார்ந்த மீனாட்சியம்மாள் நடேசய்யர், கோ.நடேசய்யர் ஆகியோரும் கவனத்துக் குரியவர்கள்.

ஈழகேசரிக் குழுவினர் கவிதைகளிலே ஆங்கில ஆட்சிக்கெதிரான எதிர்ப்புக்குரல் முதன்முதலாக ஓரளவு கேட்கின்றது.[2]

எ-டு :

"காட்டிக் கொடுத்திடும் கட்சிக் கிலங்கையும்
காணியோ - சொந்தப் - பூமியோ?
நாட்டிற் பிறந்திடும் நாங்க ளனைவரும்
நாய்களோ - பெல்லிப் - பேய்களோ?

ஆட்சிப் படைபெறு மாங்கில ராட்சியை
அஞ்சிடோம் இனித் - துஞ்சிடோம்
மாட்சி கொளிலங்கை வாழச் - சுதந்திரம்
வாங்குவோம் - கொடி - தாங்குவோம்

அத்துடன் சமகால பல்வேறு சமூகக் குறைபாடுகளுக் கெதிரான குரல்களும் ஓரளவு இடம்பெறுகின்றன.[3]

எ-டு :

"தீண்டப்படாதாரென்று - உலகில்
திசைமுகன் செய்ததுண்டோ?
வேண்டப்ப டுவதீதோ - ஐயோ
வீண்கதை பேசுகிறீர்

உரிமை உரிமை யென்பீர் - உங்கள்
எளிய சோதரர் தங்கள்
உரிமை உரிமை யென்றால் - வேத
ஏடுவிரிப் போமென் பீர்
............................"

மேற்கூறிய எதிர்ப்புக் குரல்களின் பின்னணியில் யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸினர், ஈழகேசரி பொன்னையா முதலானோரின் செயற்பாடுகள் ஓரளவு இடம்பெற்றிருப்பினும் இந்திய/தமிழ்நாட்டு தேசிய விடுதலை இயக்கம், கவிஞர் பாரதியார் முதலான தனிமனிதர் செல்வாக்கு என்பனவே அதிகமென்பது குறிப்பிடத்தக்கது. இன்னொருவிதமாகக் கூறின், ஈழத்து மத்திய தரவர்க்கத்தினர் ஆங்கில ஆட்சியிலிருந்து ஈழம், இந்தியா போன்று விடுதலை பெறுவதற்கான செயற்பாடுகளையோ அவற்றை பொதுமக்கள்மயப்படுத்துவதையோ விரும்பினாரல்லர். அத்துடன் குறிப்பாக யாழ்ப்பாண மத்தியதரவர்க்க மேட்டிமைக் குழுவினர் (Elite's) சீர்திருத்த அமைப்புக்களை தோற்றுவிப்பதிலும் ஆர்வம் காட்டினாரல்லர். அவ்வாறு தோற்றமுற்ற ஒரு சில அமைப்புகளும் அற்பாயுளிலேயே மடிந்துள்ளன.[4] அன்றைய யாழ்ப்பாணச் சமூகம், சமூகச்சீர்திருத்தத்தில் பெருமளவு நாட்டங்கொள்ளாத பழமைபேண் சமூகம் என்று கூறுவது பொருத்தமாகப்படுகின்றது.

எனினும், மலைநாட்டில் நிலைமை வேறுவிதமானது. முப்பதுகளளவிலே தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் அங்கு முனைப்புற்றிருந்தன. இவ்விதத்திலே கோ.நடேசய்யர், மீனாட்சியம்மாள் நடேசையர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களது பல்வேறுவிதத் தொழிற்சங்கச் செயற்பாடுகளுள் ஒன்றாகப் பாடல்களிலும் இலங்கை அரசாங்க சபை, இந்திய அரசு ஆகியவற்றிற்கெதிரான ஆக்ரோஷமான எதிர்ப்புக் குரல்களைக் கேட்கமுடிகின்றது.[5]

"சிங்கள மந்திரிகள் கூற்று - மிக
சீருகெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று

நன்றி கெட்டுப் பேசும் மந்திரிமாரே -
உங்கள்
நியாய மென்ன சொல்லு வீரே
இன்றி யமையாத வொரு போரே -
செய்ய
இடமுண் டாக்குறீர் நீரே"

மேற்கூறியவாறான பாடல்கள் இசைத்தன்மை, நாடகப்பாடல் மெட்டு என்பவற்றைக் கொண்டிருந்தமையும் தேயிலைத் தோட்டங்களில் மக்களுக்கு முன்னாலே பாடப்பட்டமையும் கவனத்திற்குரியன. இத்தகைய எதிர்ப்புக் குரலினை ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிப் போக்கிலே இப்போதுதான் பிரக்ஞை பூர்வமாகவும் முதன்முதலாகவும் கேட்கமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாற்பதுகளளவில் நவீனகவிதை பிரக்ஞை பூர்வமாக இடம் பெற்றபோது அம்முயற்சியில் ஈடுபட்டோர் 'மறுமலர்ச்சிக் குழுவினராவர். ஆயினும், இவர்களது கவிதைகளில் எதிர்ப்புக்குரல் அரிதாகவே இடம் பெற்றிருந்தது. இதே காலப்பகுதியில் ஈழத்துக்கவிதையுலகினுள் முதன்முதலாகப் பிரவேசித்த மார்க்சியச் சார்புடைய கவிஞர்களிடம் (எ-டு: கே.கணேஸ், அ.ந.கந்தசாமி) முதலாளித்துவம், தொழிலாளர் துயரம், சாதிமை ஆகியவற்றிற்கெதிரான குரல்கள் பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுகின்றன. இவ்விதத்தில் அ.ந.கந்தசாமி எழுதிய 'வில்லூன்றி மயானம்' என்ற கவிதை முக்கியமானதொன்று. யாழ்ப்பாணத்தில் 1946 அளவிலே இடம்பெற்ற சாதிப் போராட்டத்துடன் தொடர்புபட்ட இக்கவிதையின் முக்கியமான பகுதி பின்வருமாறு:[6]

"நாட்டினர் நீர் அறிவீர் வில்லூன்றி தன்னில்
நாம் கண்ட ஈமத்தீ வெறுந்தீ அன்று
கேட்டினிலே உளபிணத்தை உண்பதற்கு
கிளர்ந்தெழுந்த தீயன்று நெடு நாளெங்கள்
நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்னும்
நச்சுமரவீழ்ச்சியினைக் காண்பதற்காய்
வாட்டமுற்று மக்களுளம் கனன்று பொங்கும்
வல்லதொரு புரட்சித்தீ வாழ்க அஃது"

இக்காலம் (1946) வெளிவரத் தொடங்கிய 'பாரதி' சஞ்சிகையில் இத்தகைய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் பிரசுரமாகியுள்ளன. ஆயினும் இவ்வாறான முற்போக்குக் கவிஞர்களது கவிதைகள் எண்ணிக்கையில் குறைந்தவை என்பது மனங்கொள்ளற்பாலது.

ஐம்பதுகளளவில் ஈழம் சுதந்திரம் பெற்ற வேளையிலேயே தமிழ்த்தேசிய உணர்வும் ஆரம்பித்து விட்டது. இதன் வெளிப்பாடே தமிழரசுக் கட்சியின் தோற்றம் ஆகும். எனினும், இச்சூழலில் உருவான தமிழ்த்தேசியம் மொழிவழித் தொடர்புடையது என்பது நாமறிந்ததே. இப்பின்னணியில் எழுந்தகவிதைகளில் 'சிங்கள' அரசுக்கெதிரான எதிர்ப்புக் குரல்கள் மிகுந்த ஆக்ரோஷமான முறையில் வெளிப்பட்டுள்ளன. இவ்விதத்தில் நீலாவணனின் ஆரம்பகாலக் கவிதைகள் கவனத்திற்குரியவை. இவ்விதத்தில் பின்வரும் கவிதைப் பகுதிகள் நினைவுகூரத்தக்கவை:[7]

**உரிமைக் குரலைத்திருகத் தகுமோ?**

"சுழிமண்டைகளே செவி கொண்டிடுவீர்
விழி தேவையிலை வழிகாட்டிகள் நாம்
மொழிவேன் உமக்கு எனவே மொழியும்
இழிபெண் சிறிமா விழிமுன் தொடுபோர்"

**சிங்களக் கூலிகள்**

"சிங்கள மொழியெனும் சிறுநரி, உன்னைத்
தின்ன வருவதோ நீ உரி"

இதன் உச்சமாக, காசிஆனந்தனின் பிற்காலக் (அறுபதுகள்) கவிதைகள் உள்ளன. இத்தகைய கவிஞர் வரிசையில் பலருமறியாத ஆரையூர் அமரன் கவனத்திற்குரியவர். சினிமா மெட்டுகளில மைந்த இவரது சிங்கள அரச எதிர்ப்புப் பாடல்கள் மேடைகளிலும் ஊர்வலங் களிலும் பாடப்பட்டுள்ளன.[8]

எ-டு :

(மெட்டு : "வாழ்வது போனாலும்
வறுமையே வந்தாலும்")

எடுப்பு

உடலது சாய்ந்தாலும்
உயிரையே மாய்த்தாலும்
உன்நிலை தளராதே - தமிழா

பாட்டு

உடலது சாய்ந்தாலும் உயிரையே
மாய்த்தாலும்
உன்நிலை தளராதே
சூழ்ச்சிகள் சூழ்ந்த ஆட்சியில் யாரும்
வீழ்ச்சியே காண்பாரே அதனால்

இக்காலப்பகுதியில் ஊற்றெடுத்த தமிழுணர்ச்சி முதன்முதலாகப் பலபிரதேசக் கவிஞர்களையும் ஒன்றுபடுத்தியது. எ-டு: (யாழ்ப்பாணம்) மஹாகவி, முருகையன்; (மட்டக்களப்பு) நிலாவணன், ராஜபாரதி; (மலைநாடு) சக்தி.அ.பாலையா; (திருகோணமலை) தாமரைத்தீவான். இவ்விதத்தில் தமிழ் எங்கள் ஆயுதம்' என்ற தொகுப்பும் குறிப்பிடத்தக்கது.[9]

பின்வருவது "தமிழ் எங்கள் ஆயுதம்" என்ற தொகுதியில் உள்ள 'மஹாகவி'யின் கவிதையின் இறுதிப்பகுதி:[10]

கரையிலாத் தமிழ் தெருக்கணிகை மாதென
வெறிக்
கயவரின் தயவிலாக் காலிடைப் படுவதா?
முறையிலா வழிகளில் முரடர் எம்
முடிவையே முயல, நாம் மூடியோர்
மூலையில் துயில்வதா
பறையெல்லாம் அதிர்க! நம் பலமெல்லாம்
திரள்கவே
பாதிநாடெங்களுக்காக வென்றெழுகவே'

ஐம்பதுகளளவில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியிலே குறிப்பிடத்தக்க இன்னொரு மாற்றம் ஏற்பட்டது. ஈழத்தில் முஸ்லீம் கவிஞர்கள் நவீன கவிதைத் துறைக்குள் முதன்முதலாக வரத்தொடங்குகின்றனர். இத்தகைய கவிஞர்களின் முன்னோடியான புரட்சிக்கமால் முஸ்லீம் சமூகத்தினரின் குறிப்பாக முஸ்லீம் பெண்களின் மூடநம்பிக்கைகளுக்கெதிராக ஆவேசமான கவிதைகள் பல புனைந்தவர்;[11]

எ-டு :

"முக்காட்டுச் சிறையுனக்கு வெல்லமாடி?
மூலையிலே இருட்டுலகில்
கிடக்கின்றாயே?
செக்காட்டும் மாட்டுக்கே உணர்ச்சியுண்டு
செயலழிந்தாய்; ஏ பெண்ணே ஒன்று
கேட்பேன்;
எக்காலும் இந்நிலையே வாழ்க்கை
என்றால்
என்னோடி கீழடிமைவெட்கம், வெட்கம்
இக்காலே உன்னுயிரைத் தீர்ப்பாய் நாளை
எழுகின்ற புத்துலகைப் பாழாக்காதே

(புரட்சிக்கமாலுக்குப் பின்னர் அவ்வாறு இன்றுவரை முஸ்லீம் சமூகம் பற்றி முஸ்லீம் கவிஞர் எவரும் விமர்சனம் செய்யவில்லை என்பது கவனிக்கற்பாலது.)

ஈழத்தில் அறுபதுகளளவிலேயே மார்க்சியச்சார்புடைய முற்போக்குக் கவிஞர்கள் பலர் உருவாகினர். இவர்கள் கவிதைகளில் வெளிப்பட்ட சாதிமை, முதலாளித்துவம் என்பனவற்றிற்கான எதிர்ப்புக் குரல்களில் இருவேறு தன்மைகளை இனங்காணலாம்.

(அ) நேரடியாக வெளிப்படுத்தல் எ-டு: பசுபதி, (ஆரம்பகால) சுபத்திரன் கவிதைகள்[12].

எ-டு :

காலம் நெருங்குதடா

கோடித் தலையுடன் சீறி வருங்கடல்
கோபமுன் கோபமடா - தோழா
வாடி உழைத்திடும் போது எரிமலை
வாயின துள்ளமடா - குடில்
தேடிக் கிடந்திடும் துன்ப மரிந்திடத்
தோழா எழுந்திடுவாய் - பல
கோடி புலியொரு யானையென உருக்
கொண்டது என்று நட!
- சுபத்திரன் -

(ஆ) காட்சிப்படுத்தல், நாடகப்பாங்கு முதலான விதங்களில் வெளிப்படல்:

எ-டு :

நு..மான்[13], சண்முகம் சிவலிங்கம், (தேவைகருதி பின்வரும் கவிதை முழுமையாக இடம்பெறுகின்றது:)

**துயில் கலைந்தோர்**

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
'எங்களிடம்' என்ன
இழக்க இருக்கிறது?
எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
.................................................
காற்று இப் பெருங்குரலைக்
கை எடுத்துச் சென்றது
நாற்றிசையும் இக்குரலின்
நாதம் பரவியது
மண்ணின் புழுதி இவ்
வார்த்தைகளை ஏந்தியது
விண்ணில் முகிலில் இதை
மீண்டும் எழுதியது
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்

II

"யார் நீங்கள்"
இந்த நடுமதிய வேளையிலே
போர்புரியும் நோக்கில் புறப்பட்டு வந்துள்ளீர்
"யார் நீங்கள்?"
யார் நீங்கள்?
மாளிகையில் நாங்கள் களைப்பாறும்
வேளையிலே
கோப, வெறியை வெளிக்காட்டிப்
போர்புரியும் நோக்கில்
புறப்பட்டு வந்துள்ளீர்
யார் நீங்கள்.....?
..............................

ஆளும் குரல்கள்
அதிகாரக் குரல்கள்
சூழும் குளிர்ந்த நிழலில் சுகங்காணும்
ஆளும் குரல்கள்
அதிகாரக் கூக்குரல்கள்
சுங்கான் புகையின்
சுகந்த மணத்திடையே
யானைப் பிளிறல் போல்
நாற்றிசையும் கேட்டன.

III

நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் உழைப்பாளர்!
நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் வறியவர்கள்!
..............................................
எங்களிடம் என்ன இழக்க இருக்கிறது?
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
காற்று இப்பெருங்குரலைக்
கையெடுத்துச் சென்றது
நாற்றிசையும் அக்குரலின்
நாதம் பரவியது
..............................."

இவர்களதும் இவர்கள் வழிவந்த பிற்கால முற்போக்குக் கவிஞர்களான சிவசேகரம் முதலானோரதும் கவிதைகள் இன்றைய தமிழ்நாட்டு ஆய்வாளர்களால் பாராட்டப்படுகின்றமை இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.[14]

யாழ்ப்பாண உயர் மத்தியதர வர்க்கத்தினரின் மூடுண்டபண்பாட்டின் மறுபக்கங்கள் சிலவற்றை புனைகதைகளூடாக வெளிப்படுத்தியவர்கள் டானியல், எஸ். பொன்னுத்துரை முதலானோர். தமது புதுக்கவிதைகளூடாக அத்தகையோரின் பண்பாட்டிற்கெதிரான குரல் முதன்முதலாக தா.இராமலிங்கத்தினூடாக இக்காலப் பகுதியில் வெளிப்படுவது விதந்துரைக்கப்படவேண்டியது.[15]

எ-டு :

**தூக்கட்டும் தூக்கட்டும்**

"......................................"

கற்புக்கரசியாய்

வாழ் என்று வாழ்த்திச்
சிலப்பதிகாரமும்
சீதனம் தந்தார்
பாத்தி பிடிப்பார்
அள்ளி இறைப்பார்
பிஞ்சு மாதுளை
வெள்ளை மணிகளில்
இரத்தம் பிடித்திடும்
பொதிந்த ஆசைகள்
முற்றும் பலித்திடும்
என்ற கனவுடன்
கைப்பிடித் தேகினேன்
புகுந்த புதுமனையில்
கறந்த மனப்பாலைக்
காய்ச்சி உறிஞ்சுதற்கு
ஈர விறகு தந்தார்
புகை குடித்து அடுப்பூதிப்
புகைச் சூண்டபால் குடித்தான்!
காலம் கழிந்ததன்றிக்
கனவு பலிக்கவில்லை
..............................
கள்ள இறைவனிடம்
காணாமல் ஓடிவிட்டன்
வாய்முழுவதும்
தணல் கொட்டி
அடக்கிடுவேன்
ஊன் கொழுப்பு
அடக்கிடுவேன்
என்று இரைந்தெழும்பக்
கள்ள இறைவனிடம்
காணாமல் ஓடிவிட்டன்
..............................
உறுமி வந்தான்
ஓங்கிய கத்தியோடு!
ஓங்கிய கத்தியை உருவி எறிந்ததும்
திருகிய கைகளை முறுக்கி விலக்கியும்
முகத்தில் அறைந்து நிலத்தினில் வீழ்த்தி
நெஞ்சில் இருந்து நெரிக்க முயல்கையில்
ஓலமிட்டேன் நான்!
ஓலமிட்டேன் நான்!
ஓடிவந்தயல்
விளக்குப் பிடித்து வேலியால் பார்த்து
விலக்குப் பிடிக்க எவருமே வந்திலர்
உலக்கை கிடந்தது!
வலக்கை துடித்தது!
உச்சந்தலை அடி
ஓங்கி ஒரே அடி!
விளக்கு உடைந்தது........
வெள்ளம் பாய்ந்தது........
ஊடுபத்தி ஒளியும் அணைந்தது
நாய்கள் படலையில் கூடிக்குலவின
நெஞ்சில் மணிக்கூடு வேகமாக ஓடிற்று!
அவன் கட்டிய தாலியை அறுத்தெறிந்தேன்
என் காதலன் மடியினில் கிடந்தழுதேன்
நீடிய சிறையினில் பட்ட துன்பம்
ஈடுசெய் இன்பம் தந்து விட்டான்
.............................................."

எனினும் இத்தகைய எதிர்ப்புக் குரல்கள் கவிதையூடாக பின்னர் எழுப்பப்படவில்லை.

இந்த அறுபதுகளளவிலேயே மலைநாட்டுத்தமிழர் மத்தியில் 'தேசிய' உணர்ச்சி ஏற்படுகின்றது. இதனைத் தொடர்ந்து தோட்ட நிருவாகத்திற்கெதிரான எதிர்ப்புக் குரல்களும் மலைநாட்டுக் கவிஞர்

மத்தியில் ஓரளவு ஒலிக்கத் தொடங்கின எனலாம். (எ-டு: குறிஞ்சித்தென்னவன், அல்அஸுமத்). குறிஞ்சித் தென்னவன் கவிதையொன்றின் ஒரு பகுதி, பின்வருவது:[16]:

"பஞ்சமும் நோயும் பட்டினிச்சாவும்
பாட்டாளி எங்களுக்கோ? தினம்
கொஞ்சிக் குலவிக் கூத்தாடி மகிழ்வதெம்
கூட்டாளி என்பவரோ?

பொங்கிடு! பொங்கிடு! பொங்கி யெழுந்திடு
புத்துலகம் சமைப்போம் - நாம்
இங்கு படுந்துயர் மங்கி மடிந்திட
பொங்கி எழுந்திடு வோம்"

மட்டக்களப்பில் நிலவுகின்ற சமூகக் குறைபாடுகளுக்கெதிரான எதிர்ப்புக்குரல்கள் மார்க்சியச் சார்பில்லாத முற்போக்கு கவிஞர்களாலும் எழுப்பப்பட்டு வந்துள்ளன. இத்தகைய கவிஞர் வரிசையில் முன்னோடி என்று கூறத்தக்கவர் ஜி.எம்.செல்வராஜ் என்பவர். போடிமார்களுக் கெதிரான அவரது கவிதையின் ஒரு பகுதி, இது:[17]

ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
'நாளைவா' கூலிதர என்று சொல்லி
நாட்டாண்மை காட்டி எந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிட்ட பணத்தைக்
கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டி யதில் புக்கைகட்டி
வறியவர்க்கு வழங்குவதும்
பொங்கலாமோ?

ஆயினும் இவ்வரிசைக் கவிஞர்களுள் விதந்துரைக்கப்பட வேண்டியவர் நீலாவணன். சாதிமை, சுரண்டல், ஊழல் எனப்பலவிடயங்கள் தொடர்பாக அதிகம் எழுதியிருப்பவர் அவர். பின்வருவது இத்தொடர்பிலான அவரது கவிதையின் சில பகுதிகள்:[18]

"அடிபறை அடிபறை அடிசடையா - ஊர்
அரள்க, அரள்கவென அடிசடையா
அன்னம் போல தலையை முன்னால் நீட்டு
கையை
முன்னும் பின்னும் காலைத்தூக்கி
உன்னி யுன்னித் தாளந்தீர்த்து

தங்கமென்றால் எங்கள் முதலாளி - தானத்
தருமத் தண்ணீர் நிறைந்துபொங்குங்கேணி
தங்கக் காசின் ஓரமாகத்
தங்கி வாழும் நீதி! தூசு

அடிபறை அடிபறை அடிசடையா - ஒரு
அவசரமில்லை இனி அடிசடையா

குப்பையோடு உண்மையையும் கூட்டிபாவம்
கொளுத்த வென்றோ போகிறீர்கள் -
காட்டில்
எப்படிக் கொளுத்துவீர் மெய்
எரிக்க நின்று சிரிக்கும் என்று

"அடிபறை அடிபறை அடிசடையா - ஒரு
அவசரமில்லை இனி அடிசடையா"

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களிடம் இத்தகைய எதிர்ப்புக் குணம் அதிகமுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து இலக்கிய ஆய்வாளர் பலருமறிந்தது போன்று எண்பதுகள் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக கவிதை வளர்ச்சியில் மிகமுக்கியமான தொரு காலப்பகுதியாகின்றது. 'ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்' என்று நோக்கும்போது அத்தகைய முக்கியத்துவம் முதன்மை பெற்றுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில் மூன்று விடயங்கள் முனைப்புறுகின்றன.

இவற்றுளொன்று, அரசியல் எதிர்ப்புக்குரல்கள் முதன்முதலாக பிரக்ஞை பூர்வமாகவும் பரந்துபட்டரீதியிலும்

இடம்பெறுகின்றமையாகும். எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து ஏற்பட்ட அரச/ இராணுவ ஒடுக்குமுறையும் அதன் உச்சக்கட்டமாகிய 83ன் இனக்கலவரமும் ஈழம் முழுவதும் ஏற்பட்டமையும் இவற்றின் விளைவாக உருவான தமிழீழ விடுதலை இயக்கங்களும் அவற்றின் ஆயுதப் போராட்டங்களும் முனைப்புற்றமையும் இத்தகைய அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் பின்னணியாகத் திகழ்ந்தன என்பது தெளிவு.

இவ்வாறான அரசியல் எதிர்ப்புக் குரல்கள் இருவேறு அடிப்படைகளில் அமைந்துள்ளன. ஒன்று இனஒடுக்குமுறைக் கெதிரான வர்க்கரீதியிலான எதிர்ப்புக்குரல். எ-டு: நு.்.மான், சிவசேகரம் கவிதைகள்.

**எ-டு:[19]**

**நேற்றைய மாலையும்**
**இன்றைய காலையும்**

"...............................................
திருவிழாக் காணச் சென்று கொண்டிருக் கையில்
படம் பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ்நிலையத்தின் வரிசையில் நிற்கையில்
சந்தியில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இறக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்
உத்தரவாதம் அற்றவாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அணி பணிவதே
அரசியல் அறமா?
அதைநாம் எதிர்ப்போம்
அதைநாம் எதிர்ப்போம்
எங்களின் தேவை:
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்
மனிதனுக்குரிய கௌரவம்
வாழ்க்கைக்கான உத்தரவாதம்
யார் இதை எமக்கு மறுத்தல் கூடும்?
மறுப்பவர் யாரும் எம் எதிர் வருக!......
..................................................."

மற்றொன்று, இன ஒடுக்குமுறைக் கெதிராக தனிநாடு கோரும் நோக்கிலான எதிர்ப்புக்குரல். எ-டு: புதுவை இரத்தினதுரையின் கவிதைகள்

மேலும், இத்தகைய எதிர்ப்புக் குரல்கள், மெல்லிசைப்பாடல்கள், கவிதா நிகழ்வுகள், சுவரொட்டிகள் என்ற விதங்களிலும் வெளியிடப்பட்டமையும் இவ்வழி கவிதை ஜனரஞ்சகமயப் படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**எ-டு:[20]**

**(மெல்லிசைப்பாடல்)**

ஓ மரணித்த வீரனே
உன் சீருடைகளை எனக்குத் தா
உன் பாதணிகளை எனக்குத் தா
உன் படைக்கலங்களை எனக்குத் தா
உன்வீட்டு முகவரியை எனக்குத் தா
உனது இரு கண்ணீரை எனக்குத் தா

**எ-டு:[21]**

**சுவரொட்டிக் கவிதை**

"காணவில்லை
சுதந்திரம்
வயது42"

எண்பதுகளிலேற்பட்ட குறிப்பிடத் தக்க பிறிதொரு முயற்சி படித்த ஈழத்துப் பெண்கள் மத்தியிலே முகிழ்த்த சமூகவிழிப் புணர்ச்சியின் பின்னணியில் நீண்டகால ஆணாதிக்கத்திற்கெதிராக (ஈழத்தமிழ்ப்) பெண்கவிஞர்கள் முதன் முதலாக எதிர்ப்புக் குரல் எழுப்பியமை யாகும். இவ்விதத்தில் 'சொல்லாத சேதிகள்' என்ற தொகுப்பின் வரவு நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது.[22]

எ-டு :

அவர்கள் பார்வையில்

"எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள்
ஆகும்.
கற்பு பற்றியும்
மழைபெய்யெனப் பெய்வது
பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்"

– அ.சங்கரி –

மேற்கூறியவாறான பெண்கவிஞர்களுள் சிலர் பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகளை மட்டுமன்றி, அரசியல் சார்ந்த கவிதைகளையும் எழுதமுற்பட்டனர். சிவரமணி கவிதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகின்றன.

எண்பதுகளிலேற்பட்ட குறிப்பிடத்தக்க இன்னொரு முயற்சி, புகலிடக் கவிதைகளூடான எதிர்ப்புக் குரல்களாகும். எண்பதுகளின் நடுக்கூற்றிலே ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா முதலான நாடுகளுக்குச் சென்ற இளந்தலைமுறையினரின் படைப்பாக்க முயற்சிகளில் -குறிப்பாக கவிதைகளில் அரச/இராணுவ ஒடுக்குமுறைக்கெதிரான குரல்கள் தீவிரமாக ஒலித்தன. அது மட்டுமன்றி தமிழீழ விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளுக்கெதிரான எதிர்ப்புக் குரல்களும் முதன்முதலாகக் கேட்டன. புகலிடப் பெண்கள் மத்தியிலிருந்தும் குறிப்பிடத்தக்க கவிஞர்கள் உருவாகினர்.

மேற்கூறியவாறான புகலிடம் சார்ந்த அரசியல் எதிர்ப்புக் குரல்களும் ஆணாதிக்கத்திற் கெதிரான பெண்நிலைவாதக்குரல்களும் ஈழத்துக்கவிதையை மூன்றாம் உலகநாட்டுக் கவிதைப் போக்குடன் சங்கமிக்கச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக புகலிட நாடுகளில் நிலவும் நிறவாதத்திற்கெதிராக பின்வரும் கவிதை அமைந்துள்ளது:[23]

"நாங்கள் ஏன் அகதிகளானோம்
என்தாய் எங்கே?
என்தாய் மொழி எது?
நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கிறோம்?

'அவர்களால்' ஏன்
ஒதுக்கப்படுகின்றோம்?
துருக்கித் தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்?"

– நிருபா –

இவ்வாறே புகலிட பெண்நிலைவாதக் கவிதைக்கு எடுத்துக்காட்டு, பின்வருவது:[24]

"எனது இயக்கம்
எனது ஆற்றல்
எனது திறமை
அனைத்தும் எனக்கே
இருக்கக் கூடியவை
யாரிடமாவது இருந்து
இவற்றைப் பெற்றால்
நான் பெண்ணாக
இருக்க முடியாது

நீங்கள் உருவாக்கிய பெண்மை
எனது அடையாளமல்ல
நான் பெண்
பிறக்கும் போதே"

— ரஞ்சனி —

எண்பதுகளிலேற்பட்ட மேற்கூறிய வாறான எதிர்ப்புக் குரல்கள் தொண்ணூறுகளிலே சிற்சில மாற்றங்களைக் காண்கின்றன. இவ்விதத்திலே பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கன:

i. தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கெதிராக முன்னர் புகலிட நாடுகளிலே ஒலித்த எதிர்ப்புக் குரல்கள் இப்போது ஈழத்திலேயே கேட்க ஆரம்பிக்கின்றன. (எ-டு: ஆத்மா)

ii. பெண்நிலைக் கவிஞர்களின் படைப்புகள், முன்னரைவிட இப்போது பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவலடைந்தமை காரணமாக ஆழமும் கூர்மையும் தெளிவும் பெற்றறமைகின்றன. (எ-டு: பெண்ணியா, ஆழியாள், கல்யாணி)

எ-டு:[25]

'பதில்'

"என் ஆதித்தாயின்
முதுகிற்பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொருவனது
முகத்திலும்
தழும்பாய் தேமலாய்
படர்ந்து கிடக்கின்றது

அடையாளத்தை
உணரும் போதெல்லாம்
வீரியங்கொண்ட
ஊழியச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வலிக்கப் பண்ணும்
என்னைப் பிளந்து
ரத்த உடுக்கள்
வெடித்துப் பறந்து
தனித்துச் சிதறிக் கொட்டும்
தனித்து
அவை ஒவ்வொன்றும்
கிரகங்கள் என உருப்பெறும்
தன்னிச்சையாய் சுற்றிவரும்
தாளலயத்துடன்
அங்கு
எனக்கென
ஓர் பிரபஞ்சம்
என்னால் உருவாகும்
அப்போது உயிர்பெறும்
எனக்கான
வரிவடிவங்களுடன் கூடிய
என்மொழி
அதன் பின்
தேமல் படர்ந்த எவனாயினும்
உரையாடட்டும் அப்போது
கூறுகிறேன் பதிலை
என் மொழியில்
என் ஆதித்தாயின்
பெண் மொழியில்
அதுவரை நீ காத்திரு."

iii. விடுதலை இயக்கங்கள் சார்ந்த பெண் போராளிகளுட் சிலர் கவிதை எழுத முற்படுகின்றனர்.

எ-டு:[26]

"எனது இனிய தேசமே
குறிப்பெடுத்துக்கொள்
எரியுண்டு
சிதைந்துபோன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளைக்
குறிப்பெடுத்துக்கொள்
......................"

— மேஜர்பாரதி —

iv. அரச,இராணுவ ஒடுக்கு முறைகளுக் கெதிரான விடுதலை இயக்கஞ்சார்ந்த கவிதைகள் தொண்ணூறு களின் இறுதிப் பகுதியிலே முன்னரைப் போல் பரவலாக அறியப்படாவிட்டாலும் அவ்வப்போது இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து ஓரளவு வெளிவந்து கொண்டிருக்கின்றன. (எ-டு : செம்மணிக் கவிதைகள் தொகுப்பு.)

இனி, வாய்மொழி இலக்கியங் களுடாக, குறிப்பாக வாய்மொழிப்பாடல் களுடாக, எதிர்ப்புக்குரல்கள் வெளிப்படு மாற்றினைப் பற்றிச் சுருக்கமாக கவனிப்போம்.

கூர்ந்து நோக்கின் வாய்மொழிப் பாடல்களையும் இருவகைப்படுத்தலாம். பாடியவர் யாவர் என்று இனங்காண முடியாதவை, ஒருவகை. பாடியவர் யாரென்று தெளிவாக இனங்காணக் கூடியவை, மற்றையவகை.

பாடியவர் யாரென்றறியப்படாத வாய்மொழிப் பாடல்களில் எதிர்ப்புக்குரல்கள் என்று கவனிக்கும்போது முதலில் மலையகப்பிரதேசப் பாடல்கள் கவனத்திற்குட்படுகின்றன.[27]

<u>எ-டு:</u>

"அந்தனா தோட்டமீது
ஆசையா தானிருந்தேன்
ஒரு மூட்டை தூக்கச்சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா

கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்
மொட்டே புடுங்குதின்னு
மூனாளு விரட்டி போட்டான்

வேலை முடிஞ்சிருச்சு
வீட்டுக்கு பயணமாச்சு
வேலையில்லா கண்டாக்கையா
வெரட்டுராறு எங்களேதான்"

இத்தகைய வாய்மொழிப்பாடல்கள் சிலவற்றில் தோட்டநிருவாகத்திற்கெதிரான குரல்களையும் (எ-டு: பட்டியகாமம் வேல்சாமிதாசன்), சிலவற்றிலே சமூகக் குறைபாடுகளுக்கெதிரான குரல்களையும் அவதானிக்க முடியும்.[28].

<u>எ-டு:</u>

**எல்லாம் அதுக்குள்ளே**

"பத்தடிக்காம்பரா வீட்டிலே - மக்கள்
படுக்கக் கஷ்டம் பாருங்க பாட்டிலே
தாயும் தகப்பனும் அதுக்குள்ளே - மேஜர்
ஆகிய
தலைப்பெண்ணும் அதுக்குள்ளே - சொந்த
மாமனும் மாமியும் அதுக்குள்ளே - சொந்த
மருமகன் மகளுமே அதுக்குள்ளே
.........................................
கங்காணிச் சாமிக்கும் வரிப்பணம் - உதிரி
காளான் சங்கத்திற்கும் வரிப்பணம்
பொங்கலுக்கும் பூசைக்கும் வரிப்பணம் -
நம்ம
பூசாரி உடுக்கைக்கும் வரிப்பணம்

— வி.எஸ்.கோவிந்தசாமித்தேவர் —
— ஏ.எம்.ராமையாதேவர் —

இவ்வாறான மட்டக்களப்புப் பிரதேசப்பாடல்களுள் குறிப்பாக கவிகளுள் ஆணாதிக்கத்திற்கெதிரான குரல்கள் கணிசமாக இடம்பெறுகின்றமை விதந்துரைக் கற்பாலது.[29]

<u>எ-டு :</u>

"நீயொரு வல்லவக் காரனெண்டு வாங்கி
வச்சேன் உன்பணத்தை
கோழித்தத்துவக் காரா கொண்டுபோடா
உன் பணத்தை"

(களஆய்வு - மண்டூர் கிராமம்)

மேற்கூறியவாறு பெண்கூற்றாக அமையும் பாடல்களை ஆண் பாவனைப் பாடல் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர். சர்ச்சைக்குரிய அவ்விடயத்தை இங்கு ஓரளவு ஏற்றுக்கொண்டாலும் அக்காலச் சமூகப்பிரக்ஞையின் வெளிப்பாடு அவற்றினூடே ஓரளவு வெளிப்படுகின்ற தென்பதில் தவறில்லை.

இறுதியாக, தொகுத்து நோக்கும் போது, எழுத்து ஊடகக் கவிதைகளில் முப்பதுகள் தொடக்கம் அரசியல் எதிர்ப்புக் குரல்களும் சமூக எதிர்ப்புக் குரல்களும் ஒலிப்பதை அவதானிக்க முடிகின்றது. இவற்றுள் சமூக எதிர்ப்புக் குரல்கள் அறுபதுகளில் மார்க்சியச்சார்புடைய முற்போக்குக் கவிஞர்களின் வரவிற்குப் பின்னரே முதன்மை பெறுகின்றன. அரசியல் எதிர்ப்புக் குரல்கள் எண்பதுகள் தொடக்கம் செல்வாக்குப் பெறுகின்றன. இவ் அரசியல் எதிர்ப்புக் குரல்கள் ஈழத்திலேயே பெருமளவு இடம்பெற்றுள்ளன. இவை, சாதாரண மக்களைச் சென்று சேர்ந்துள்ளன போன்று, சமூக நோக்குடைய எதிர்ப்புக் கவிதைகள் சென்று சேரவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

வாய்மொழிப்பாடல்களில் எதிர்ப்புக் குரல்கள் அதிகம் இடம்பெறவாய்ப் புள்ளது. ஆயினும், இவைபற்றிய போதியளவிலான பரவலான தொகுப்பு முயற்சிகளும் ஆய்வுகளும் இன்றுவரை நிகழவில்லை இவ்வித முயற்சிகள் தமிழ்நாட்டில் கணிசமாக இடம்பெற்றுள்ளன. இவ்வாய் மொழிப் பாடல்கள் தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக மக்களிசை வடிவில் வலுவான சக்தியாக உருவெடுப்பதையும் அறிய முடிகின்றது.

## <u>அடிக்குறிப்புகள்</u>

01. யோகராசா.செ. **ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் 1985 வரையிலான அதன் வளர்ச்சியும்,** பற்றிய ஓர்ஆய்வு- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு 1998ல் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வேடு (நூலுருப்பெறாதது).
02. வேந்தனார், **கவிதைப்பூம்பொழில்,** 1985 ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம், ப.41.
03. சத்தியநாதன், **ஈழகேசரி,** 21-03-1934.
04. கலாயோகி ஆனந்தகுமாரசாமியைத் தலைவராகக் கொண்டு 1905ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமூகச் சீர்திருத்தச்சபை சில வருடங்களே செயற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.
05. மீனாட்சியம்மாள்,கோ.ந, **இந்தியர்களது இலங்கையின் நிலைமை,** 1940 அட்டன்.
06. **தினகரன்** 11-09-1944
07. **சுதந்திரன்** 20-10-1959
08. ஆரையூர் அமரன், **அறப்போர்க்குரல்,** 1961 மட்டக்களப்பு.
09. **தமிழ் எங்கள் ஆயுதம்,** 1962 முத்தமிழ் வெளியீடு, யாழ்ப்பாணம்,
10. மே.கு.நூ.ப.11.

11. புரட்சிக்கமால், **புரட்சிக்கமால் கவிதைகள்,** 1962 கண்டி, ப.2.

12. சுபத்திரன், **சுபத்திரன் கவிதைகள்** 1997, பூவரசன் வெளியீடு, ப.22.

13. நு்.மான், **மழைநாட்கள் வரும்** 1983 அன்னம், சிவகங்கை, பக் : 40-46.

14. சிவகுமார்.ஆர். **புதுக்கவிதையும் புதுப்பிரக்ஞையும்,** 1985 காவ்யா, பெங்களூர், மு.ப. ப.29.

15. இராமலிங்கம்.தா. **காணிக்கை,** 1967 அரசுவெளியீடு, கொழும்பு, பக் : 12-14.

16. குறிஞ்சி தென்னவன், **குறிஞ்சி தென்னவன் கவிதைகள்** 1987 மலையக வெளியீட்டகம், கண்டி, 2ம் பதிப்பு 1987, பக் : 16.

17. பாரதி, செப். 1948, மட்டக்களப்பு, ப.14.

18. நீலாவணன், **வழி,** 1976, கல்முனை, பக் : 88-89.

19. நு்.மான்.எம்.ஏ, மே.கு.நா, பக் : 69-71

20. மெல்லிசைப் பாடல்கள் -1 ஒலிப்பதிவுநாடா, யாழ்ப்பாணம் 1989.

21. ஆய்வாளரது சேகரிப்பிலிருந்து

**22.** **சொல்லாத சேதிகள்,** பெண்கள் ஆய்வுவட்டம், யாழ்ப்பாணம்.

23. நிருபா **தேனீ,** தை 1993, ப : 43

24. ரஞ்சனி, **இனியும் சூல்கொள்,** (1997) 23வது இலக்கியச்சந்திப்பு பிரான்ஸ், பக் : 7.

25. ஆழியாள், **உரத்துப்பேச** 2000, மறு, சென்னை, பக் : 21-22.

**26.** **காலம் எழுதிய கவிதைவரிகள்** (தொகுதி I) 1994 தமிழ்த்தாய் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

27. சாரல்நாடன் **மலையகம் வளர்த்த தமிழ்,** 1997, கொழும்பு, பக் : 109.

28. ஜில், கே.கே.எஸ். **இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் போட்டிவிடுதலை,** பதுளை 1960.

29. சந்திரசேகரம்.சி. நாட்டுப்புறப்பாடல்களில் ஆணாதிக்கச் செயற்பாடும் அதற்கெதிரான குரலும், **நெய்தல்,** தொகுதி II எண் 1, கிழக்குப்பல்கலைக்கழகம்.

# CHALLENGES AND IMPORTANCE OF IDENTIFYING AND ESTABLISHING A TRADITION FOR WRITING IN ENGLISH BY THE THAMILS OF SRI LANKA.

– S. JEYASANKAR –

*Identifying the creative writings in English by the Thamils and establishing it as a tradition is a scholarly work but a neglected part in the history of the literary tradition of the Thamils in Sri Lanka.*

*When I think about creative writing in English as a tradition, it is an irony that a society with popularly known silver- tongued orators in English had not thought about or were not aware about a creative tradition as a resistance against colonial systems as in India or in African countries because we had limited experiences in the national liberation struggle against colonialism and can identify its impact on our political and intellectual tradition right from independence.*

*After independence, politicians and intellectuals representing the community took the language issue as a medium to gain power to rule their people in place of the colonisers. Decolonizing the minds of the people was not their concern. The unchanged existance of the colonial education system will reveal this matter very clearly.*

*Thomas Macaulay's "Minute on Indian Education" portrays the colonial construct. It says, "It is impossible for us, with our limited means, to attempt to educate the body of the people. We must at present do our best to form a class who may be the interpreters between us and the millions whom we govern; a class of persons, Indian in blood and colour, but English in taste, in opinion, in morals, and in intellect"* [1]

*The above statement is also appropriate to the elite of the Sri Lankan Thamil community. At the same time we can identify the efforts of movements like National Youth Congress to awaken national consciousness among the Thamil community throughout history. Even though it was not very strong, and faced difficulties in Sri Lankan politics and had limitations to meet the challenges of the contemporary world, it nevertheless had the power to resist colonialism.*

*Prime Minister Ms Sirimavo Bandaranayaka's conversation with the former Commonwealth Secretary-General, Mr.Sridath Ramphal will reveal the*

*truth that from the time of independence we haven't had a proper language policy to meet our future as an independent nation.*

*Sridath Ramphal "Shortly after I became Secretary-General of the Commonwealth in 1975, I met Prime Minister Srimavo Bandaranayaka in Colombo and we talked of ways in which the Commonwealth Secretariat could help Sri Lanka. Her response was immediate and specific: "Send us people to train our teachers to teach English as a foreign language". My amazement must have showed, for the Prime Minister went on to explain that the policies of her husband put in place twenty years earlier to promote Sinhala as the official language had succeeded so well that in the process Sri Lanka so long the pearl of the English speaking world in Asia-had in fact lost English, even as a second Language save for the most educated Sri Lankans. Her concern was development. Farmers in the field, she told me, could not read the instructions on bags of imported fertiliser- and manufacturers in the global market were not likely to print them in Sinhala. Sri Lanka was losing its access to the world language of English. We did respond. I believe that today English is doing better as the second language in Sri Lanka".[2]*

*Colonially constructed state and education system will not deliver goods in favour of the natives' aspirations. So, the reasons behind the difficulty in identifying creative writing in English as a tradition is crystal clear.*

*Even though there are writings in English From C.V. Vellupillai, poet Tambimuttu, Alagu Subramaniam, S.J.K. Crowther, T. Ramanathan, Raja Proctor, Heather Loyala, Saraswathi Rockwood, Guy Amirthanayagam, T. Somasundarm, V. Ariyanayagam, Jeyanathan, Thurairajah to A. Shivanandhan, Jean Arasanayagam T. Arasanayagam, Shyam Selvadurai, Bamini Slevadurai Valan, Indran Amirthanayagam, Rohini Hensman, E.C.T. Candappa, A. Shanthan, Parvathi Arasanayagam, S. Pathmanathan, S. Thillainathan, Pon Ganeshan and several others. They weren't continued and constructed as a tradition. But intellectuals are regularly presenting academic papers in English, because of the requirements of the Universities to publish articles in international journals for which they gain points in the academic system. But they don't seem to concentrate or involve themselves in creative writing because they are not awarded points for such works.*

*The reason behind it is very simple. There is no space for creativity in the education system. This is the politics of the colonial education system. "Masks of Conquest" a book by Gauri Visvanathan[3] is about the origin and ideology of English studies in India, where in she argues that English Literature was introduced as a subject in India even before it became a subject in England.*

*This was because it was belived that Indians who learnt English Literature would be convinced that Europeans possessed a humanistic and Christian tradition of literature that was far*

*superior to anything which existed in the Indian Languages. In other words, the study of literature created an ideal colonial subject who would accept and appreciate the British "Civilising" mission, It is under this colonial mesmerism that we are functioning.*

*Education is one of the most powerful media of Colonialism and neo colonialism. A powerful weapon of social control. Although Sri Lanka has been independent for fifty years, the values and patterns of British colonial education continues to persist.*

*Education in Gramsci's terms, is "dominant by consent". "This domination by consent is achieved through what is taught to the colonised, how it is taught and the emplacement of the educated subject as a part of the continuing imperial apparatus-a knowledge of English literature, for instance, was required for entry into the civil service and the legal profession. Education is thus a conquest of another kind of territory - it is the foundation of the colonialist power and consolidates this power through legal and administrative apparatus"[4] Now it has shifted from literature to business, English for Business purposes and it has lead to the slogan "without English there is no future".*

*So the process of identifying and establishing a tradition for creative writing in English among the Thamils of Sri Lanka is a part of the decolonization of Thamilian minds. As Mulk Raj Anand said,"No apology is necessary to bring truthful to the echoes of one's mother tongue and the imaginative communication for those vibrations which are in the nerves of the people not born of English mothers.[5]*

*In Thamil there is a myth called " Heaven of Thirisangu" or "World of Thirisangu". It is a world in space between earth and heaven. Thirisangu wants to go to heaven but heaven rejects him and he doesn't want to return to the earth. So he is in a world of his own between earth and heaven. The life in this world has constructed a state of mind which will not accept the native order and can not achieve the order acceptable to the colonial standard. This is the world of imitation, constructed by the colonial rule and its education system which leads to form of fear in the minds and functions as a mental block to engage in creative activities. I have had discussions with people who are well- versed in English literature who had attempted creative writing in English and were involved in creative writing in Thamil but had given up creative writing in English after a few attempts because of this fear and lack of recognition.*

*But A.J. Canagaratha said "One of the reason may be that apart from lack of encouragement and outlets for production, the standard English taught in school and its emphasis on grammar and British models may have inhibited creativity. I remember Alagu subramaniam telling me when I asked him why the language in some of his stories sounded artificial and stilted, that the English man thought that the 'natives' could write only "Babu English" (an insulting reference to the English of the Indian 'natives')*

*they had to prove that they could write English the way English man wrote it".*[6]

*The view of Mulk Raj Anand is different.*

*"I began writing earlier than he (Tambimuttu) and in prose. My novels are about the poor and disinherited of Asia. Naturally I was abused and Misunderstood, except in the third world, and the world of the poor of Europe. But the Iiterati thought that I was a communist stooge. I am saying this because one, imporant Iapse on Tamibis part was not to remember he came from the disinherited society."*[7]

*Ngugi wrote in his book 'Decolonizing the Mind', "In my view language was the most important vehicle through which that power fascinated and held the soul prisoner. The bullet was the means of the physical subjugation. Language was the means of the spiritual subjugation."*[8]

*So if we want to live in a world of creation with creative imagination, we have to identify and establish a tradition determined by our socio-cultural context which will erase our fear and break our mental block and bring forth people with creative imagination to face the challenges of neo-colonialism.*

*The socio-political history of the Thamils of Sri Lanka and the history of the literary tradition in English reveals that importance is given to English as a medium of instruction in business and not as a medium of creative expression. But the generation of the last decades of the 20th century had different opinions. They too are the products of the mother tongue but the experience of the liberation struggle and the diaspora of the Thamils have opened-up new frontiers and new thinking.*

*The thinking of the importance of creative imagination is the major factor in the current intellectual and creative traditions of the Thamils of Sri Lanka. They are willing to express their feelings, experiences and thinking in a creative way. They express their creativity in their new world as originals or as transcreations or as translations. The Thamils in exile express their creative imagination not only in their own language but also in the languages of their adopted countries. They are also actively involved in translating original works from the languages of their adopted countries into their mother tongue.*

*It is a shell shock for the conventional intellectual community because most of the people engaged in this process are not familiar with English and do not have a university background. The interesting thing is the part played by the universities in the North and East in this process which is questionable and always criticised by the intellectual community outside the universities.*

*The emergence of the "Third Eye" a little magazine in English first published in 1993 to bring out original works, critical works, translations and transcreations from Thamil writings and the reproductions of the works of pioneers and the thinking of creative*

*tradition in English is a part of the above process and is not the contribution of the English medium educated. Prof. Sures Canagarajah's writing on theatre will clarify this situation.*

*In an article titled "Experiment and controversy in the Jaffna English Theatre" which appeared in the "Third Eye" he says, "The English theatre scene has taken an experimental turn in the past couple of years. A series of plays staged here (James Thuber's Ostrich. and Jamal Banoura's "Accused" staged on 30th August 1991; Abjit Sicar's Child's play staged on 19th July 1991 and 30th August 1991; Bernard B.Dardee's "The village' staged on 02 and 15th February 1992 and on 10th June 1993; Alagu Subramaniyam's short story "Professional Mourners" adopted by A.J. Canagaratna "Wake-up my beloved" staged in February 1993 and on 10 June 1993) have been quite controversial in their reception".[9]*

*"Though all this is repulsive for many brought up in the classical tradition, most of the school students and University producers involved are fortunately influenced by the vibrant Thamil theatrical tradition. The Thamil theatre is also primarily a school level or educational theatre. The younger generation is then now able to connect the Thamil and English theatrical traditions. It is true that hitherto, the Thamil theatre borrowed Ibsen, Chekov and Beckett through English. But now the tables are turned: The English theatre is borrowing local themes, indigenous music, acting and directorial skills from the Thamil tradition, promising interesting new departures for the Jaffna English theatrical scene".[10]*

*Contrary to this, most of the Thamils who were the doyen of the English literature do not know or have the least familiarity with Thamil Language, literature and their experiences are limited to the four walls of their gardens. But this is different from those who are writing in French, German, Norwagian, etc. They have direct experiences in the liberation struggle and are not from the elite. So their perspectives and purposes are different. This is strange but true, in a sense a revolution in a society dominated by conservative ideas.*

*After we started to publish "The Third Eye", our search for original manuscripts, translations, transcreations and rare publications of the pioneers began. In this search we faced strange experiences. We have collected manuscripts from writers who are adamant to write again. The root cause is frustration. Now "The Third Eye" has given a momentum to the process of identifying and establishing a tradition for creative writing in English, by the Thamils of Sri Lanka.*

*The emergence of the 'English Forum' with the support and guidance of Prof. S. Canaganayagam, Prof. Suresh Canagarajah, Mr. A.J. Canagaratna, Mr. S. Rajasingam and the involvement of Mr. T. Somasundaram gave the moral boost at the initiation and the development of the process of identifying and establishing a tradition for the writing in English by the Thamils of Sri Lanka.*

*The current intellectual traditions of the Thamils of Sri Lanka are not one dimensional determined by the English tradition as in the earlier period; it is multi dimensional and is directly open to various intellectual traditions of the world. The liberation struggle and the writings of expatriate Thamils have given an additional impetus to this new dimension. The Thamils of Sri Lanka now have access to the world through various channels and are in a position to select material in consonance with their accepted views. This is the major change of perspective in the intellectual traditions of the Thamil community.*

*In this background, identifying and establishing a tradition for creative writing in English parallel to the other traditions will create a different perception among the international community as opposed to the world constructed by the mass media in this information age.*

*I'll conclude my presentation with a quotation from Mahadma Gandhi,"I do not want to be walled in on all sides and my windows to be stuffed.I want the cultures of all the lands to be blown about my houses as freely as possible. But i refuse to live in another people's houses as interloper, a begger or as a slave."*

## References :


1. *Macaulay, Thomas B. (1835)* — *'Minute on Indian' ,Education in speeches of Lord Macauly with his minute on Indian Education, selected with an Introduction and notes by G.M. young (1935), oxgord, oxford University press.*

2. *Crystal, David (1997)* — *English as a Global Language, Cambridge University Press.*

3. *Viswanathan, Gauri (1989)* — *Masks of Conquest, Literary Study and Brit ish Rule in India, New york, Columbia Unversity Press*

4. *Ashcroft, Bill, Gareth, Griffiths and Helen Tiffin (1995)* — *The Post Colonial Reader, Routledge, Lon don and New York.*

5. *Anand, Mulk Raj,* — *Voice of Protest, January 12, 1996, Frontline.*

6. *Canagaratna, A.J.* — *Letter Correspondence, 2000*

7. *Williams, Janes (1989)* — *Thambimuttu : Bridge Between Two orlds, Peter Owen, London.*

8. *Nigugi, wa Thiang' o (1981 a)* — *'The Language of African Literature', in Decolonizing the mind: The Politics of Lan guage in African Literature, London, James Currey.*

9. *Canagarajah, Suresh (1993)* — *"Experiment and controversy in Jaffna Eng lish Theatre." Third Eye, First Issue.*

10. *Ibid*

# மட்டக்களப்பு மாவட்ட கல்வி வாய்ப்புக்களுக்கும் பாடசாலை இட அமைவுகளின் பரம்பலுக்கும் இடையிலான தொடர்பு

— மரகதலிங்கம் வர்ணகுலசிங்கம் —

## முன்னுரை :

நாடொன்றின் அபிவிருத்தியினை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் குறிகாட்டிகளில் எழுத்தறிவு முக்கியம் பெறுகின்றது. இதில் இருந்து நாடொன்றின் அபிவிருத்திச் செயன்முறைப் போக்கில் கல்வி முக்கியம் பெறுகின்றமை தெளிவாகின்றது. மனித வளமே வளங்கள் அனைத்திலும் முக்கியமானது என பொருளாதாரப் புவியியலாளர்களும் பொருளியலாளர்களும் இனம் காட்டியுள்ளனர். மனிதர்களை வளமானவர்களாக்க கல்விப் பயிற்சி அவசியமானதாகின்றது, அதன் மூலம் நாட்டின் மனித வளம் சீரடைவதுடன் சூழலில் காணப்படும் அனைத்து மூலவளங்களையும் உச்சப் பயன் பாட்டுக்குக் கொண்டுவரக் கூடிய தொழில் நுட்பத் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புக்கள் உள்ளன. இக் கல்விப் பயிற்சியினை வழங்கும் முக்கிய இடமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி தொடர்பான இந்த கட்டுரையில் தற்போது இங்கு காணப்படும் கல்விப் பிரச்சனைகளில் பாடசாலைகளின் இட ரீதியான அமைவுகள் எவ் வகையில் மாணவர்களின் கல்வியைப் பாதிப்பதில் பங்கு கொள்கின்றன என்பது நோக்கப்படுகின்றது. கல்வியை வழங்குவதில் யாவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பதில் இன்றைய உலக நாடுகளிடையே ஒரு உடன்பாடு உண்டு. இலங்கையிலும் கல்விச் சமத்துவம் வழங்குதல் அரச கொள்கைகளில் ஒன்று. ஆனால் இது மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்தளவு சரியானதாக உள்ளது என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. அத்துடன் பாடசாலைகளின் இட அமைவுகளை நன்கு ஆராயும்போது மாணவர் சமுதாயம் எந்தளவுக்குப் பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றது என்பதும் தெளிவாகின்றது. இவ்வாறான காரணிகளால் மாணவர் சமுதாயம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை அனுமதித்தல் மனித இனத்தின் அறிவு வளர்ச்சியை தடை செய்யும் ஒரு பிற்போக்கான செயன் முறையாகவே கருத வேண்டியுள்ளது. கல்வியானது மனிதனது பிறப்புரிமை என்று ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் சாசனம் கூறினாலும், அதன் உண்மையான நோக்கத்தை

படையக் கூடிய விதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல மாணவர்களும் தமது கல்வியை முழுமையாகப் பெறக்கூடியதான கல்விக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா என்பது நுணுகி ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

## பாடசாலைகளின் இட அமைவு

எனது இக் கட்டுரையில் மாணவர்களின் கல்வியினைப் பாதிக்கும் பாடசாலைகளின் இட ரீதியான பரம்பலுக்கே முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. ஒரு பாடசாலைக்கும் அப்பிரதேசத்தின் மக்கள் தொகைக்குமான தொடர்பு, பாடசாலைக்கும் போக்குவரத்துக்குமான தொடர்பு, பாடசாலைக்கும் பொருளாதார நடவடிக்கைக்குமான தொடர்பு, என்பவை இட அமைவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மாணவர்கள் கல்வி தொடர்பாக எதிர் நோக்கும் பிரச்சனைகளில் குறிப்பிடக்கூடிய அளவு பங்கினை பாடசாலைகளின் இட ரீதியான பரம்பல், அதில் காணப்படும் குறைபாடுகள் ஏற்றுக் கொள்பவையாகவே காணப்படுகின்றன.

இந்த வகையில் இம் மாவட்டத்திலிலுள்ள பாடசாலைகளின் இட அமைவுகளை மூன்று வகையினதாக நோக்கமுடியும்.

1. தரமான பாடசாலைகள் மிகவும் குறைவாகக் காணப்படும் படுவான் கரைப் பிரதேசம்.
2. தரமான பாடசாலைகள் அதிகமாகக் காணப்படும் கிழக்குக் கரைப் பகுதி.
3. கிழக்குக்கரைப் பகுதியில் குவிந்த முறையில் பாடசாலைகளைக் கொண்ட சில மையங்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் சமமற்ற கல்விப் பரம்பலால் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் உருவாகின்றன. நகர, கிராம, குக்கிராமங்களுக்கிடையிலான கல்வியமைப்பில் இந்த வேறுபாட்டை உணர முடிகின்றது. இத்தன்மை மேலும் மேலும் சில பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதாகவும், சில பகுதிகளை மென் மேலும் பாதிப்படையச் செய்வதுமாகவே உள்ளது. பாடசாலை வசதிகள் மிகவும் குறைவாக உள்ள கிராமப் பகுதிகள் இதனால் மிகவும் பாதிப்படைகின்றன. போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவாகக் காணப்படும் இம் மாவட்டத்தில் கல்வியைப் பெறுவதில் கிராமப்புற மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நகர்ப்புறப் பகுதிகள் உயர்தர பாடசாலைகளின் மையமாகக் காணப்படும் தன்மை கிராமப் புற மக்களின் கல்வி வாய்ப்புக்களை அதிகளவில் பாதிக்கின்றது. சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நகர்ப்புற பகுதியில் நிரந்தரமாகவதியும் பாடசாலை செல்லும் வயதுடையோரிலும் மிக அதிகமான மாணவர்கள் நகர்ப் புறத்தில் கல்வி பயில்வதை அவதானிக்க முடிகின்றது. வெளியிடங்களில் இருந்து நகர்ப் புறத்திற்கு வந்து கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இது நகர்ப் புறங்களில் நிரந்தரமாக வதியும் மாணவர் தொகைக்கு மேலதிகமாக பாடசாலைகள் உள்ளது என்பதையோ பாடசாலைகள் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும்

விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதையே சுட்டிக்காட்டுவதாய் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி தொடர்பாக சிந்திப்பவர்களுக்கு பின்வரும் வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாததாக உள்ளன. அவை

1. குறிப்பிட்ட சில இடங்களில் குறுகிய பரப்பினுள் பல பாடசாலைகள் அமையப் பெற்றமைக்கான காரணங்கள் யாவை?

2. பாடசாலை இட அமைவிற்கும் அப்பகுதி மாணவர் தொகைக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது?

3. இப் பாடசாலைகள் ஏன் இம்மாவட்டத்தில் பரந்த முறையில் அமைக்கப்பட வில்லை.?

4. ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி இவை அமைக்கப்பட காரணமாய் இருந்த காரணிகள் யாவை?

5. அவை பரந்த அடிப்படையில் அமைவதற்கு தடையாய் இருந்த காரணிகள் யாவை?

விடுதி வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மிகவும் அரிதாகக் காணப்படும் இம் மாவட்டத்தில் கிராமப்புற மக்கள் தம் கல்வியைத் தொடர நீண்ட தூரம் பிரயாணம் செய்ய முடியாதவர்களாகவும் அதே சமயம் விடுதியில் தங்கிருந்து தமது கல்வியைத் தொடர பொருளாதார ரீதியாக வாய்ப்பற்றவர்களாகவும் உள்ளனர். எனவே இம்மாவட்ட மாணவர்கள் கல்வி தொடர்பாக எதிர் கொள்ளும் பிரச்சனைகளையும் அதற்கான அடிப்படைக் காரணங்களையும் மேற்காட்டப்பட்ட வினாக்களுக்கான விடைகளையும் அறிந்து கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட கல்வி வரலாற்றை சுருக்கமாக நோக்குவது சிறந்தது.

**கல்வி வரலாறு :-**

கல்வி வளர்ச்சி உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்ட போதிலும் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை இலங்கையில் குறிப்பிடக் கூடிய அளவுக்கு மாற்றம் ஏற்படவில்லை.

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் வாழ்ந்த செல்வந்தர்களே வெளிநாட்டுக் கல்வியைப் பெறும் வாய்ப்பைக் கொண்டிருந்தனர். 18ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலேயே மட்டக்களப்பில் கல்வி நடவடிக்கைகள் ஓரளவிற்கு ஆரம்பிக்கப்பட்டன. விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாக கொண்டிருந்த இம்மாவட்ட மக்கள் அன்னியர்கள் தங்களை மாறி மாறி ஆள்கின்றார்கள் என்பதை அறிந்திருந்தார்களேயன்றி தாங்களும் கல்வி கற்று அந்த ஆட்சியில் பங்கேற்க வேண்டுமென விரும்பவில்லை. காரணம் மட்டக்களப்பு மண் சிறு முயற்சிக்கும் பெரும் பயன் அளிக்கவல்லதாக காணப்பட்டதால், இங்கு வாழ்ந்த மக்கள் வறுமையில் ஆழ்ந்து கிடந்ததாகவோ, பசியால் வாடி வதங்கிக் கிடந்ததாகவோ வரலாறு இருக்கவில்லை. இதனால் கிறிஸ்தவப் பாதிரிமார் நடாத்திய பாடசாலைகளில் கற்று அரச உத்தியோகம் பெறவேண்டிய அவாவோ, அவசியமோ மக்களுக்கு இருக்கவில்லை. யாழ் மாவட்டம் இதில் இருந்து வித்தியாசமானது. நிலத்தில் அதிகம் கஷ்டப்பட்டே பெரும் பயனை அடையக் கூடிய நியதி காணப்பட்டமையால், ஆங்கிலக் கல்வியினால் அரச உத்தியோகம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்ட போது பெரும் தொகையானோர் கல்வி நலம் பெற விழைந்தனர்.

இதனைவிட யாழ்ப்பாணம் போன்று இங்கு கல்வி விருத்தி அடையாமைக்கான மற்றைய காரணம் கிறிஸ்தவ சமயக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டது போன்று மட்டக்களப்பில் காலூன்றக் காலம் சென்றமையாகும். அத்துடன் சிறந்த வியாபாரிகளாகவும் விவசாயிகளாகவும் திகழ்ந்த முஸ்லிம்கள் கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. கல்வியானது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவே வேண்டப்படு கின்றது என மக்கள் கருதினர். அத்தகைய கல்வியை குடும்பத்திலும் சூழலிலும் பெற்றுக் கொள்ள முடியுமாயின், அத்தகைய சமூகம் நியம முறையிலான ஏட்டுக் கல்வியில் அதிக அக்கறை கொள்ள நியாயம் இருக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்ட கல்வி வளர்ச்சி 1814ம் ஆண்டு இங்கு வந்து சேர்ந்த கிறிஸ்தவப் பாதிரிமாரின் வருகையுடன் ஆரம்பமானது. 1813.12.20 இல் இங்கிலாந்து நாட்டிலிருந்து பாய்க்கப்பல் மூலம் ஆறாயிரம் மைல் கடல் பரப்பைக் கடந்து எட்டு மாதம் பயணம் செய்து 1814.08.12 இல் மட்டக்களப்பை வந்தடைந்த வில்லியம் ஆல்ட் எனும் பாதிரியாராலும் அவருடன் வந்த ஏனையோராலும் இம் மாவட்டத்தின் முதலாவது ஆங்கில மொழிப் பாடசாலை (மத்திய கல்லூரி) மட்டக்களப்பில் 1814ல் அமைக்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பமான கல்விப் பணியினூடாக பல்வேறுபட்ட கிறிஸ்தவ மதங்கள் தங்கள் சமயக் கொள்கைகளை பரப்புவதில் போட்டியிட்டுச் செயற்பட்டன. தத்தமது மதங்களை வளர்ப்பதில் மிஷனரிகள் ஓயாது செயற்பட்டனர். தங்களது மதக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு கல்வி அறிவற்றிருந்த இம் மாவட்ட மக்களுக்கு முதலில் கல்வியைப் புகட்டி அதன் மூலம் தமது மதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு பாடசாலைகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் மதப்பிரசாரிகளுக்கு ஏற்பட்டது. ஏற்கனவே ஓரளவு கல்வியறிவைப் பெற்றிருந்த நகர்ப் புற மக்களை தத்தமது மதத்தின் பால் கவர வைத்து அவர்கள் மூலம் ஏனையவர்களையும் மதம் மாற்றும் முன்நடவடிக்கையாக மட்டக்களப்பு நகர்ப்புறத்தை அண்டி பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இவற்றில் குறிப்பிடக் கூடிய அளவு பங்கை மெதடிஸ்த திருச்சபை (1814), கத்தோலிக்க திருச்சபை (1849) என்பவை கொண்டிருந்தன.[7] இந்துக்கள் கல்வி அடிப்படையில் மதம் மாற்றப்படுவதை தடுத்து நிறுத்தும் நோக்குடன் இந்து சமயத் துறவிகளால் குறிப்பாக சுவாமி விபுலானந்தர் போன்றவர்களின் தலைமையில் நகரையும், கிராமப் புறங்களையும் அண்டி 1925க்கு பின்னர் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.[3] இவ்வாறு சமய நோக்குடன் நகர்ப்புறத்தில் அமைக்கப்பட்ட பாடசாலைகளைத் தவிர அரசினால் அமைக்கப்பட்ட பாடசாலை களின் பங்களிப்பு இம்மாவட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில் 1970 வரை குறைவாகவே காணப்பட்டது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வரலாற்றை நோக்குகின்ற போது மத அடிப்படையிலான நோக்கங்களின் பின்னணியில் பாடசாலை கள் அமைக்கப்பட்டாலும் இது இம் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பினை அளித்துள்ளதை அறிய முடிகின்றது. அதே சமயம் கிராமப் புறங்கள் இப் பாடசாலைகளின் அமைவிடத் தன்மையினால் பாதிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்ட அமைவிடம்

இது இலங்கையின் கிழக்குக் கரையில் $70^0$ - 30‘ தொடக்கம் $80^0$ - 45‘ வட அகலக்கோட்டிற்கும், $81^0$ -15‘ தொடக்கம் $81^0$ - 45‘ கிழக்கு நெடுங் கோட்டிற்கும் இடையில் அமையப் பெற்றது. 1046.6 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட இம் மாவட்டத்தில் 65.1 சதுர மைல் பரப்பளவில் நீர் நிலைகளும், 951.5 சதுர மைல் பரப்பளவான நிலத்தினையும் கொண்டது. வடக்குத் தெற்காக 68 மைல் நீளத்தினையும் ஏறத்தாழ 24 மைல் அகலத்தினையும் கொண்டதாக உள்ள இம் மாவட்டத்தின் எல்லைகளாக வடக்கு திருமலையையும், மட்டக்களப்பையும் பிரிக்கும் வெருகல் ஆறு, கிழக்கு வங்காள விரிகுடா, தெற்கு அம்பாறை மாவட்டமும், மேற்கு பொலநறுவை மாவட்டமும் உள்ளன. இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 3.81% த்தை கொண்டுள்ளது. (படம் - 1)


## மக்கள் அடர்த்தியும் போக்குவரத்து நிலையும்

இம் மாவட்டத்தில் 1999 சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்தச் சனத்தொகை 508731 ஆகக் காணப்படுகின்றது. பிரதேச செயளாளர் பிரிவு ரீதியான மட்டக்களப்பு மாவட்ட குடித்தொகை தொடர்பான விபரம் அட்டவணை-1 இல் காட்டப்படுகின்றது. இது இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 2.35 வீதம் ஆகும். இங்கு வாழும் மக்களை அடர்த்தி மற்றும் பரம்பல் அடிப்படையில் இருவகையாகப் பிரித்து நோக்கலாம். (படம் - 02)

1. சனத்தொகைச் செறிவு மிக்க கிழக்குக் கரையோரப் பகுதி.
2. சனத்தொகை குறைவாகக் காணப்படும் படுவான்கரைப் பகுதி அல்லது மேற்குப் பகுதி.


படம் 01

## மட்டக்களப்பு மாவட்டத்தின் அமைவிடம்



படம் 02

## மட்டக்களப்பு மாவட்டம் - பிரதேச ரீதியான குடித்தொகை அடர்த்தி - 1999.



அட்டவணை - 1

## மட்டக்களப்பு மாவட்டம் - பிரதேச செயலாளர் பிரிவுகளின்படி குடித்தொகை அடர்த்தி - 1999

| பிரதேச செயலாளர் பிரிவு | நிலப்பரப்பு (ச.கி.மீ) | மொத்தக் குடித்தொகை | குடி அடர்த்தி |
|---|---|---|---|
| கோறளைப் பற்று வடக்கு | 419.1 | 18333 | 43.7 |
| கோறளைப் பற்று மேற்கு | 205.7 | 47108 | 229.0 |
| கோறளைப் பற்று | 566.1 | 56481 | 97.8 |
| ஏறாவூர்ப் பற்று | 554.9 | 66420 | 119.7 |
| ஏறாவூர் நகரம் | 3.3 | 30414 | 9216.4 |
| மண்முனை வடக்கு | 43.0 | 78092 | 1816.1 |
| காத்தான்குடி | 6.5 | 35806 | 5508.6 |
| மண்முனைப் பற்று | 21.5 | 26245 | 1220.7 |
| மண்முனை தென் எருவில் பற்று | 45.1 | 55620 | 1233.3 |
| போரதீவுப் பற்று | 170.9 | 42815 | 250.5 |
| மண்முனை தென் மேற்கு | 120.4 | 24409 | 202.7 |
| மண்முனை மேற்கு | 277.9 | 26988 | 97.1 |
| **மொத்தம்** | **2464.4** | **508731** | **206.4** |

மூலம் :- புள்ளிவிபர அறிக்கை - கச்சேரி மட்டக்களப்பு, 1999

வயதடிப்படையில் இம்மாவட்ட சனத்தொகை அட்டவணை-2 இல் காட்டப்பட்டவாறு அமைகின்றது. மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் கணிசமான அளவு மக்கள் கிழக்குக் கரை சார்ந்த பகுதியிலேயே வாழ்கின்றனர். இதற்கு பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைகின்றன. முக்கியமாக மாவட்டத்தில் உள்ள முக்கிய வீதிகள் (பிரதான வீதி, புகையிரத வீதி) கிழக்குக் கரை சார்ந்து செல்வதும் (படம் -3) அவ்வீதியை அண்மித்து அரச அலுவலகங்கள், நகரங்கள், பாடசாலைகள், மற்றும் முக்கிய திணைக்களங்கள் காணப்படுவதும் இப்பிரதேசங்களை அண்டி அதிக சனத் தொகை காணப்படுவதற்கு காரணமாகும். இவ்வாறு அதிகரித்த சனத் தொகையைக் கொண்டு காணப்படும் இக் கிழக்குக் கரைப் பகுதி மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதியினதாகக் காணப்படுகின்றது. மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் சுமார் 65 வீதமான சனத் தொகையை உள்ளடக்கியதாக இப் பிரதேசம் காணப்படுகின்றது.

**அட்டவணை - 02**


**மட்டக்களப்பு மாவட்டம் - வயதமைப்பு அடிப்படையில் குடித்தொகை 1981, 1991*, 2001***

| வயதுக் குழு | 1981 | | | 1991 | | | 2001 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 0-14 | 42.8 | 43.2 | 43.0 | 39.5 | 38.7 | 39.2 | 34.8 | 33.8 | 34.2 |
| 15-64 | 54.1 | 54.1 | 54.1 | 56.9 | 58.2 | 57.4 | 60.9 | 62.1 | 61.6 |
| 65 க்கு மேல் | 3.1 | 2.7 | 2.9 | 3. 6 | 3.1 | 3.4 | 4.3 | 4.1 | 4.2 |

**மூலம் :- புள்ளிவிபரக் கையேடு, கச்சேரி, மட்டக்களப்பு - 1992**

டம் - 04

# மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான போக்குவரத்துப் பாதைகள்



படுவான்கரைப் பகுதி என அழைக்கப்படும் மாவட்டத்தின் மேற்குப் பகுதி வாழைச்சேனையில் இருந்து செல்லும் கொழும்பு வீதி, செங்கலடிச் சந்தியில் இருந்து செல்லும் பதுளை வீதி போன்றவற்றை உள்ளடக்கிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. பதுளை வீதி பிற மாவட்டப் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது. வாழைச்சேனையில் இருந்து வெருகல் ஊடாகத் திருகோணமலை செல்லும் மற்றொரு பிரதான வீதியும் அரச போக்குவரத்து தடை செய்யப்பட்ட பகுதியாக காணப்படுகின்றது. மேலும், இம் மாவட்டத்தின் மொத்தப் பயிர்ச்செய்கை நிலங்களும் நீர்ப்பாய்ச்சல் குளங்களும் இப் பிரதேசத்திலேயே காணப்படுகின்றன. தபால் அலுவலகம் தவிர்ந்த வேறு எந்த விதமான அரச அலுவலகங்களோ வசதியுடன் கூடிய வைத்திய நிலையங்களோ இப்பாரிய பிரதேசத்தில் இல்லை. இவை காரணமாக இப் பிரதேசத்தில் சனத்தொகைச் செறிவும் குறைவாகவே காணப்படுகின்றது. மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலத்தினைக் கொண்டுள்ள இப் பிரதேசத்தில் மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் சுமார் 35 சதவீதத்தினர் வாழ்கின்றனர்.

**எழுத்தறிவு வீதம் :-**

எழுத்தறிவு வீதம் இம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1946ல் இருந்து 1981 வரையிலான 35 வருட காலத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தைக் கண்டுள்ளது. ஆண்களின் எழுத்தறிவு வீத வளர்ச்சியை விட பெண்களின் எழுத்தறிவு வீத வளர்ச்சி கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த 35 வருட காலத்தில் ஆண்களின் எழுத்தறிவு வீத வளர்ச்சி 10.3 ஆக காணப்பட, பெண்களின் எழுத்தறிவு வீதம் இதே காலப்பகுதியில் 35.8 வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளது. ஆயினும், முழு இலங்கையுடனும் ஒப்பிடுகையில் 1981 வரை எழுத்தறிவில் மட்டக்களப்பு மாவட்டம் 20 வீதம் குறைவாகவே காணப்பட்டது. அதை அடுத்த காலப்பகுதியில் இம் மாவட்டத்தின் கல்வி குறிப்பாக எழுத்தறிவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் 1998ல் இம் மாவட்ட ஆண்களின் எழுத்தறிவு 77.3 சதவீதமாகவும் பெண்களின் எழுத்தறிவு வீதம் 75.1 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. அட்டவணை - 03 இதனை விளக்குகின்றது.

**அட்டவணை - 03**

**எழுத்தறிவு வீதம் இலங்கை - மட்டக்களப்பு 1946 - 1981**

| ஆண்டு | இலங்கை | | மட்டக்களப்பு | | வளர்ச்சி அதிகரிப்பு 35 வருடத்தில் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1946 | 57.8 | 57.8 | 62.4 | 23.6 | 10.3 | 35.8 |
| 1981 | 90.5 | 82.4 | 72.7 | 59.4 | | |

## பாடசாலைகளின் தரமும் அவற்றின் அமைவிடங்களும் :-

கல்வி வலய ரீதியாக பாடசாலைகள் பல எண்ணிக்கையில் காணப்படுகின்ற போதிலும் இப் பாடசாலைகளின் இட அமைவு மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் உள்ள மாணவர்களுக்கு வேண்டிய கல்வியை வழங்கக் கூடிய விதத்தில் அமைந்து காணப்படாமை மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தடை செய்யும் முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளின் தரம், எண்ணிக்கை போன்றவை அட்டவணை 4,5,6 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை – 04**

**மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளும் தரமும் - 1998**

| தரம் | | தொகை |
|---|---|---|
| 1AB | (கலை, விஞ்ஞானம், வர்த்தகம்) | 16 |
| 1C | (கலைப் பிரிவு மட்டும்) | 43 |
| Type II | (11ம் ஆண்டு வரை) | 59 |
| Type III | (05ம் ஆண்டு வரை) | 203 |
| | மொத்தம் | 321 |

ஆனால் ஆண்டு 2000ல் எடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பாடசாலைகள பின்வருமாறு அமைகின்றன :

**அட்டவணை – 05**

## மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளும் தரமும் - 2000

| வலையம் | இயங்கும் பாடசாலைகள் | 1AB | 1C | Type II | Type III | இயங்காதவை |
|---|---|---|---|---|---|---|
| கல்குடா | 85 | 05 | 08 | 12 | 60 | 11 |
| மட்டக்களப்பு | 135 | 09 | 20 | 31 | 75 | 09 |
| பட்டிருப்பு | 80 | 03 | 16 | 12 | 49 | 01 |
| மொத்தம் | 300 | 17 | 44 | 55 | 184 | 21 |

அட்டவணை – 06

## மட்டக்களப்பு மாவட்டத்தின் பாடசாலைகள் - 1998


| பி.செ. பிரிவு | சனத் தொகை | பாடசாலைகளின் தரம் | | | | தமிழ் | முஸ்லிம் | சிங்களவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1AB | 1C | II | III | | | | |
| **மட்டக்களப்பு வலயம்** | | | | | | | | | |
| மண்முனை மேற்கு | 26988 | 00 | 02 | 04 | 19 | 24 | 00 | 01 | 25 |
| மண்முனை வடக்கு | 78092 | 06 | 07 | 14 | 18 | 40 | 03 | 02 | 45 |
| மண்முனைப் பற்று | 26215 | 00 | 05 | 03 | 14 | 15 | 07 | 00 | 22 |
| காத்தான்குடி | 35806 | 01 | 02 | 04 | 09 | 00 | 16 | 00 | 16 |
| ஏறாவூர் நகர் | 30414 | 01 | 03 | 02 | 04 | 03 | 07 | 00 | 10 |
| ஏறாவூர்ப் பற்று | | 00 | 02 | 08 | 16 | 16 | 07 | 03 | 16 |
| மொத்தம் | | | | | | | | | 144 |
| **கல்குடா வலயம்** | | | | | | | | | |
| ஏறாவூர் பற்று | 66420 | 02 | 01 | 01 | 20 | 24 | 00 | 00 | 24 |
| கோறளைப் பற்று | 56481 | 01 | 01 | 07 | 28 | 36 | 00 | 01 | 37 |
| கோறளைப் பற்று மேற்கு | 47108 | 02 | 02 | 02 | 14 | 00 | 19 | 01 | 20 |
| கோறளைப் பற்று வடக்கு | 18333 | 00 | 02 | 02 | 11 | 15 | 00 | 00 | 15 |
| மொத்தம் | | | | | | | | | 96 |
| **பட்டிருப்பு வலயம்** | | | | | | | | | |
| மண்முனை தென் எருவில் பற்று | 55620 | 03 | 08 | 03 | 20 | 34 | 00 | 00 | 34 |
| மண்முனை தென் மேற்கு | 24409 | 00 | 03 | 03 | 10 | 16 | 00 | 00 | 16 |
| போரதீவு | 42815 | 00 | 05 | 06 | 20 | 31 | 00 | 00 | 31 |
| மொத்தம் | | | | | | | | | 81 |
| **மொத்தம்** | | 16 | 43 | 59 | 203 | 254 | 59 | 08 | 321 |

இம்மாவட்டத்தின் ஆரம்பகாலப் பாடசாலை இட அமைவுகளும், அதனை அடுத்து வந்த காலப் பகுதியில் அமைக்கப்பட்ட பாடசாலைகளின் இட அமைவுகளும் சகல பகுதி மாணவர் களையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் அமைக்கப் படவில்லை. பொருளாதார, பௌதீகவியல், அரசியல் ரீதியாக பல இடர்களை எதிர் நோக்கும் கிராமப் புறம் சார்ந்த இம்மாவட்ட மாணவர்கள் தங்களது பிரதேசங்களில் தங்களுக்கு வேண்டிய கல்வி கிடைக்கப் பெறாதவர்களாக, பாடசாலை வசதிகள் அற்றவர்களாக காணப்படுகின்றனர். இம் மாவட்டத்தில் காணப்படும் உயர்தர வகுப்பினைக் கொண்ட பாடசாலைகளில் அனேகமானவை கிழக்குக்கரை சார்ந்த பகுதிகளிலேயே காணப்படுகின்றன. அதிலும் 1AB தரத்திலான பாடசாலைகள் கிழக்குக்கரைப் பகுதியில் ஒரு சில மையங்களிலேயே காணப்படுகின்றன. 1AB, 1C, தரம் II தரத்திலான பாடசாலைகள் மாவட்டத்தின் கிழக்குக்கரை சார்ந்த பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படுகின்றன. தரம் III தரத்தினைக் கொண்ட பாடசாலைகளே மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. பாடசாலைகளின் இட அமைவைக் காட்டும் படங்கள் இதனை நன்கு விளக்குகின்றன. (படம் 4)

பட இலக்கம் 5ல் காட்டப்பட்டதின் படி மாவட்டத்தில் உள்ள க.பொ.த. உயர் தர பாடசாலைகள் அனேகமாகக் கரையோரம் சார்ந்த பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ளதையும், அவை கிழக்குக் கரையிலிருந்து மேற்கே 5 மைல் பிரதேசத்துக்குள் குறிப்பிடக் கூடிய சில மையங்களில் குறிப்பாக மட்டுநகர், வாழைச்சேனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி ஆகிய விருத்தியுற்ற பிரதேசங்களில் மிகவும் நெருக்கமான முறையில் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. மாவட்டத்தின் வட புறத்தில் வாழைச்சேனையில் இருந்து வெருகல் வரையான 25 மைல் துாரப் பிரதேசத்தில் இரு உயர்தர வகுப்புக்களை கொண்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. இவை இரண்டும் கலைப்பிரிவை மாத்திரமே கொண்டவையாகும். மட்டக்களப்பு நகரைப் பொறுத்தவரையில் நகர் அமைந்திருக்கும் புளியந்தீவுப் பகுதியில் குறிப்பாக ஒரு சதுர மைல் பரப்பிற்குள் 5 உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மிகவும் நெருக்கமான முறையில் அமைந்து காணப்படுகின்றன. பொதுவாக நகரைச் சுற்றிய 5 சதுர மைல் பரப்பிற்குள் 12 உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ்வாறே ஏறாவூர் நகரை அண்டிய பகுதிகளிலும் பாடசாலைகள் குவிந்து காணப்படுகின்றன. க.பொ.த. சாதாரணதரப் பாடசாலைகளைப் பொறுத்த வரையிலும் இதை ஒத்த நிலைமைகளே காணப்படுகின்றன. (படம் - 5)


படம் 04

## க.பொ.த உயர்தரப் பாடசாலைகளின் அமைவிடம் - மட்டக்களப்பு மாவட்டம் 1998



படம் 05

## க.பொ.த சாதாரண தரப் பாடசாலைகளின் அமைவிடம் மட்டக்களப்பு மாவட்டம் - 1998



அதே சமயம் பெருமளவு நிலத்தைக் கொண்ட மேற்குப் பகுதி பாடசாலை செல்லும் வயதுப் பிரிவினரை கணிசமான அளவு கொண்டிருக்கின்ற போதிலும் போதிய உயர்தரப் பாடசாலையோ, அல்லது சாதாரணதர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையோ, மாணவர் தொகைக்கேற்ப அமையப் பெறாமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய குறைபாடாக காணப்படுகின்றது. அட்டவணை- 7 இம்மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக பாடசாலை செல்லும் வயதுப் பிரிவினரைக் காட்டுகின்றது. இதன் மூலம் பாடசாலைகளின் பரம்பலில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று உணர முடிகின்றது.

## அட்டவணை - 07

**சனத்தொகை 5-14 வயதுப் பிரிவினர் - 1999**

| பிரதேச செயலாளர் பிரிவு | தொகை |
|---|---|
| மண்முனை மேற்கு | 6078 |
| மண்முனை வடக்கு | 17586 |
| மண்முனைப் பற்று | 5910 |
| காத்தான்குடி | 8064 |
| ஏறாவூர் நகர் | 6849 |
| ஏறாவூர் பற்று | 14957 |
| கோறளைப் பற்று | 12720 |
| கோறளைப் பற்று மேற்கு | 10608 |
| கோறளைப் பற்று வடக்கு | 4129 |
| மண்முனை தென் எருவில் பற்று | 13115 |
| மண்முனை தென் மேற்கு | 5497 |
| போரதீவு | 9641 |

மூலம் :- புள்ளிவிபர அறிக்கை- கச்சேரி, மட்டக்களப்பு - 1998

மட்டக்களப்பிலிருந்து வடக்கே உள்ள வெருகல் வரையிலான 45 மைல் துார இடைவெளியில் வசிக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது முழு மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் அதைவிட பதுளை, திருமலை, அம்பாறை, போன்ற மாவட்ட மாணவர்களுக்கும் உயர்தர கல்வி வாய்ப்பையும் விடுதி வசதியையும் அளித்து இம்மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றிய வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயக் கட்டிடம் 1980ல் கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்காக கையளிக்கப்பட்டது. ஆனால் அப்பாடசாலைக்கு மாற்றீடாக சித்தாண்டியில் அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயம் எந்த வகையிலும் முன்னர் இருந்த மத்திய மகா வித்தியாலயத்திற்கு சமமானதாக அமையவில்லை. விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்த நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதி மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியது. குறிப்பாக மாவட்டத்தின் கிராமப் பகுதியில் இருந்து வந்து விடுதியில் தங்கிப் படித்த மாணவர்களை மிகவும் மோசமாக பாதித்த விடயமாகி விட்டது. பாடசாலை இட அமைவுகளில் காணப்படும் சமனற்ற பரம்பலால் மாணவர்களின் கல்வியில் ஏற்படும் மாற்றத்தை அட்டவணை 8ல் அவதானிக்கலாம்.

## அட்டவணை - 08

**பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும், வகுப்பு ரீதியாகவும் மாணவர் தொகையும் பாடசாலையிலிருந்து விலகும் அளவும் 1998**

| பி.செ.பிரிவு | ஆண்டு - 01 | | ஆண்டு - 05 | | ஆண்டு - 06-11 | | ஆண்டு - 12-13 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வாகரை | 4021 | 100% | 2853 | 70.9 | 1162 | 28.8 | 06 | 0.1 |
| ஓட்டமாவடி | 7660 | 100% | 4333 | 56.5 | 3118 | 40.7 | 209 | 2.7 |
| வாழைச்சேனை | 9792 | 100% | 5714 | 58.3 | 3878 | 39.6 | 200 | 2.0 |
| செங்கலடி | 12572 | 100% | 7633 | 60.7 | 4684 | 37.2 | 255 | 2.0 |
| ஏறாவூர் நகர் | 7655 | 100% | 3531 | 46.1 | 3726 | 48.6 | 398 | 5.1 |
| மண்முனை வடக்கு | 20811 | 100% | 7707 | 37.0 | 10969 | 52.7 | 2135 | 10.2 |
| காத்தான்குடி | 7810 | 100% | 3768 | 48.2 | 3637 | 46.5 | 405 | 5.1 |
| ஆரையம்பதி | 6035 | 100% | 3159 | 52.3 | 2669 | 44.2 | 207 | 3.4 |
| களுவாஞ்சிக்குடி | 14883 | 100% | 6711 | 45.0 | 7188 | 48.2 | 984 | 6.6 |
| போரதீவு பற்று | 8928 | 100% | 4931 | 55.2 | 3844 | 43.0 | 153 | 1.7 |
| பட்டிப்பளை | 5260 | 100% | 3036 | 57.7 | 2147 | 40.8 | 77 | 1.4 |
| வுவுணதீவு | 4530 | 100% | 2945 | 65.0 | 1550 | 34.2 | 35 | 0.7 |
| மாவட்டத்தில் சராசரியாக தொடர்ந்து கற்போர் விகிதம் | | | | 652.9 | | 504.5 | | 41 |
| | | | | 12 | | 12 | | 12 |
| | | | | 54.4 | | 42.0 | | 3.4 |

**மூலம் :- பாடசாலை விபர அறிக்கை கல்க்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்புக் கல்விவலயங்கள் - 2000**

அட்டவணைப்படி முதலாம் ஆண்டு மாணவர்கள் சேரும் அளவானது ஆண்டு 5ல் குறைவடைவதனையும் ஆண்டு 5ல் இருந்து ஆண்டு 6க்கு செல்லும் போது மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதனையும் பின்னர் ஆண்டு 12ல் மாணவர் அனுமதி மிக வேகமாக வீழ்ச்சியடைவதனையும் அவதானிக்க முடிகின்றது. இந்த வீழ்ச்சிப் போக்கு பொதுவானதாக காணப்பட்டாலும் கிராமம், நகரங்களுக்கிடையே இந்த அளவில் அதிக வித்தியாசம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனை அட்டவணை 9ல் அவதானிக்கலாம். மாணவர் இடைவிலகல் கல்குடா வலயத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது.

## அட்டவணை - 09

**வலய அடிப்படையில் மாணவர் வீழ்ச்சி வீதம் 1998**

| வலயங்கள் | ஆண்டு - 05 | ஆண்டு - 06 | ஆண்டு - 12 |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | 48.0 | 44.1 | 7.8 |
| கல்குடா | 60.3 | 35.6 | 4.0 |
| பட்டிருப்பு | 50.8 | 45.6 | 3.5 |

**மூலம்: - பாடசாலை விபர அறிக்கை கல்க்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்புக் கல்விவலயங்கள்- 2000**

இதற்கான பிரதான காரணம் இம் மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் அல்லது படுவான்கரைப் பகுதி மற்றும் வாகரைப் பிரதேசத்தில் அனேகமான பாடசாலைகள் வகுப்பு 5 வரை உள்ளதாகவும், சில பாடசாலைகள் வகுப்பு 11 வரை உள்ளதாகவும் காணப்படுகின்றமையாகும். ஆண்டு ஐந்து வரை கல்வி கற்கும் இந்தப் பகுதி மாணவர்களில் பலர் மிகவும் வறியவர்களாகக் காணப்படுவதனால் ஆண்டு 11 வரை உள்ள தூர இடப் பாடசாலைக்கு செல்ல முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் ஆண்டு ஐந்துடன் தமது கல்வியை முடித்துக் கொண்டு தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஓரளவு வசதி கொண்டவர்கள் தமது பிள்ளையை தூர இடத்தில் இருக்கும் ஆண்டு 11 வரையிலான பாடசாலைக்கு மாற்றி கற்க உதவுகின்றனர். உதாரணமாக வாகரை பிரதேச செயலாளர் பிரிவு மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுகின்றது. போக்குவரத்து சீராக இல்லாத பகுதியாகவும் உள்ளது. (அட்டவணை- 08) இங்கு ஆண்டு ஒன்றில் 100 வீதமாக இருந்த மாணவர் சேர்வு ஆண்டு 6ல் 28.8 வீதமாகவும், ஆண்டு 12ல் 0.1 வீதமாகவும் மாற்றமடைகின்றது. ஆனால் நகர்ப் புறத்தில் மண்முனை வடக்குப் பிரிவில் ஆண்டு 1ல் 100 வீதமாக இருந்து ஆண்டு

8ல் 57.7 வீதமாகவும் ஆண்டு 11ல் 10.2 வீதமாகவும் மாற்றமடைகின்றது. இதற்கான காரணங்கள் பல இருந்தாலும் வசதியான பாடசாலைகள் மண்முனைப் பகுதியில் அண்மையில் கிடைக்கப் பெறுவதும், விடுதி வசதிகளும், சிறந்த போக்குவரத்து வசதி காணப்படுகின்றமையுமே முக்கிய காரணிகளாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

## முடிவுரை :

ஆகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி விருத்தியில் முக்கிய பங்களிப்பைச் செய்யக்கூடிய பாடசாலைகளின் இட அமைவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. மாவட்டத்தின் சனத்தொகை, பாடசாலை செல்லும் வயதுப்பிரிவினரின் பரம்பல் அவற்றின் தொகை என்பவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பாடசாலை சேரும் விகிதம், அதிகரிக்க வாய்ப்பேற்படுவதுடன், இடைவிலகல், மற்றும் பொருளாதார ரீதியான வீண் விரயம், மாணவர்கள் கல்விக்காக செலவாகும் நேரம் குறைதல் போன்ற பலவிடயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். காலதாமதமின்றி செய்ய வேண்டிய பணிகளாக இது காணப்படுவதால் புதியதாக பாடசாலைகளை உருவாக்கும் வரையில் தற்போது சாத்தியமாக உள்ள தரம் III பாடசாலைகளை குறைந்தது க.பொ.த. சா.தரம் வரையில் கற்பிப்பதற்கு ஏதுவான வசதிகளையாவது செய்து கொடுத்தல் மாணவர்களுக்கு க.பொ.த சாதாரண தரம் வரையிலான கல்வியைப் பெறுவதற்கான ஒரு முன்னோக்கு நடவடிக்கையாக அமையலாம். அவ்வாறே படுவான் கரைப் பகுதியில் சில தெரிவு செய்யப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பாடசாலைகளை க.பொ.த உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாக தரமுயர்தப்படுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

போக்குவரத்து வசதிகள் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கியதாகவும், போக்குவரத்துக்கள் மிகவும் அச்சுறுத்தல், அசௌகரியம் என்பவை நிறைந்ததாகக் காணப்படுவதனாலும், நகரப்புறத்தில் குவிந்த நிலையில் காணப்படும் பாடசாலை விடுதி வசதிகள் மாவட்டத்தின் சகல பகுதி மாணவர்களும் இலகுவாக பெறக்கூடிய விதத்தில் பரவலாக்கப்பட வேண்டும். இந்த வசதி செய்து கொடுக்கப்படுவது, பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள அதன் காரணமாக கல்வியைத் தொடர முடியாதுள்ள மாணவர்களுக்கு மிகவும் நன்மை அளிக்கும் விடயமாக இருக்கும். அத்துடன் மாணவர்கள் தங்கள் கல்வியை இலகுவாகவும் சிரமமின்றியும் பெறக்கூடிய விதத்தில் செங்கலடி பதுளை வீதி, வாழைச்சேனை வெருகலூடான திருமலை வீதி என்பவற்றை போக்குவரத்துக்கான வசதிகளுடன் சீரமைக்கவும் ஆவன செய்யப்படல் வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. முத்துலிங்கம். எஸ்., 1983 **கல்வியியல்** 1ம் பாகம், பக். 07 - கொழும்பு

2. தேசிய கல்வி நிறுவகம் - **கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்** பகுதி - II மகரகம

3. அழகரெத்தினம். செ. - 1992 **விபுலானந்தம்** திருவுருவச் சிலை திறப்பு விழா மலர்- திருகோணமலை.

4. பிரேமரெத்தினா போகொட - 1979 **கல்வியின் பொருத்தப்பாட்டினை நோக்கி** கொழும்பு - பக்கம் 68.

5. சென் மைக்கல் கல்லூரி - 1984 **கல்லூரி ஆண்டறிக்கை** மட்டக்களப்பு

6. சேதுகாவலர். ஆர்.என். **மத்திய தீபம்** கல்லூரி வரலாறு, பகுதி II , மட்டக்களப்பு

7. மத்தியூ. எஸ். ஏ. ஐ. - 1986 **அணையா விளக்கு,** கல்முனை

8. புள்ளிவிபரத் திணைக்களம், கச்சேரி, மட்டக்களப்பு. புள்ளி விபர அறிக்கை - 1997 மட்டக்களப்பு

9. புள்ளிவிபரத் திணைக்களம், புள்ளி விபர அறிக்கை - 1998, கச்சேரி, மட்டக்களப்பு.

10. வலயக் கல்வித் திணைக்களம், பாடசாலை விபர அறிக்கை கல்குடா. - 2000

11. வலயக் கல்வித் திணைக்களம், பாடசாலை விபர அறிக்கை - 2000 மட்டக்களப்பு.

12. வலயக் கல்வித் திணைக்களம், பாடசாலை விபர அறிக்கை பட்டிருப்பு. - 2000

13. Fr. Lange J. W. - 1979 "St. Michael's college century volume" Batticaloa. P.76

## ஆய்வுக்கட்டுரை அமைப்புத் தொடர்பான குறிப்புகள்

1. கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்படலாம்.

2. இக் கட்டுரைகள் தட்டெழுத்தில் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் இரட்டை இடைவெளி உள்ளனவாய் அமைதல் வேண்டும். தாளின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் ஓரங்குல ஓரம் இருத்தல் வேண்டும்.

3. பக்கங்கள் தெளிவாக இலக்கமிடப்பட்டு தொடர்பு விலகாமல் ஒன்றாய்ச் சேர்த்துக் காட்டப்படல்வேண்டும்.

4. ஒவ்வொரு கட்டுரையிலும் இரண்டு பிரதிகள் அனுப்பப்படல்வேண்டும்.

5. உசாத்துணை விபரமும் அடிக்குறிப்புகளும் இலக்கமிடப்பட்ட பட்டியலாகக் கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்படல் வேண்டும். உசாத்துணை நூல் விபரம் தொடர்முறையில் அமைதல் வேண்டும். நூலாசிரியர் பெயரும் முதலெழுத்துக்களும்; வெளியிட்ட ஆண்டு; நூலின் சரியான தலைப்பு (கீழே கோடிடப்படுதல் வேண்டும்.); வெளியீட்டாளர் பெயர்; வெளியிடப்பட்ட இடம்.

   **உ + ம் :** பவானி, <u>**கடவுளரும் மனிதரும்**</u> (1994)
   பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், கொழும்பு.

   சஞ்சிகைகளை உசாத்துணையாகக் குறிப்பிடும்போது பின்வரும் ஒழுங்கினைப் பின்பற்றவேண்டும். ஆசிரியரின் பெயரும் முதலெழுத்துகளும், வெளியீட்டு ஆண்டு, கட்டுரைத் தலைப்பு (மேற்கொள் அடைப்பினுள்), சஞ்சிகையின் தலைப்பு (கீழே கோடிடப்படல் வேண்டும்.), வெளியீட்டாளர் பெயர், தொகுதி இலக்கம் (அராபிய எண்களில்) பக்கம்.

   **உ + ம் :** விபுலானந்தர் சுவாமி 1941
   "சோழநாட்டுத் தமிழும் ஈழநாட்டுத் தமிழும்"
   <u>**கலைமகள்**</u> 3 : 1, பக் 18 - 25.

7. 200 சொற்களாலான கட்டுரைச் சுருக்கம் ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கட்டுரையின் தலைப்பு, எழுதுவோரின் பெயரும், கல்வித் தகமைகளும், பதவியும், முகவரியும் தரப்படல் வேண்டும்.